பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 19 | திங்கட்கிழமை | (02-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 45

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைந்ததும்

# புலிகளின் பொலிஸ், நீதி மன்றம், வங்கி, இலங்கைக்குரியதாக மாற்றப்படும்!

## அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தாம் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய பின் விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலையங்களை இலங்கைப் பொலிஸ் நிலையங்களாகவும் அவர்களின் நீதி மன்றங்களை இலங்கை நீதி மன்றங்களாகவும் அவர்களின் வங்கிகளை இலங்கை நாட்டின் வங்கிகளாகவும் மாற்றுவோம். இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.**

பதுளை ஹாலிஎலவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் ராஜித சேனாரட்ண மேற்கண்டவாறு சூளுரைத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

மக்கள் விடுதலை முன்னணி, விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலையங்களை மூட வேண்டும் என்று கூறி வருகின்றது. சந்திரிகாவா ரணில் விக்கிரமசிங்காவா இந் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடுகிறார்கள் என்ற யதார்த்த நிலையை நாம் இப்போது காண்கிறோம். தற்போது விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள மணிராசன்குளம் முகாமை மூடிவிட்டு அந்த இடத்தில் இராணுவ முகாம் உருவாக்கப்படும். இதனை அடையவே சமாதான முயற்சிகள் மேற்கொள்கிறோம் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா அங்கு உரையாற்றும் போது,

கடந்த 2வருடங்களாக நாம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றபோதும் நாட்டைத் துண்டாடுவதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவருக்குள் ஒருவர் மோதிக் கொள்வதற்கு இடமளிக்காது அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் செயற் திட்டங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளார் என்றும் கூறினார். (ம)

## புலிகளுடன் பின்கதவுத் தொடர்பா?

# ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடக பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கௌரவித்து வந்துள்ள போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பின்கதவால் தொடர்புகளை ஏற்படுத்த அவர் முயலவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளைப் பொறுப்பேற்று அதனை முன்னெடுத்துச் செல்லும் திட்டம் எதுவும் ஜனாதிபதியிடம் இருக்கவில்லை.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நடைமுறைச் சாத்தியம் பற்றி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி பிரதமரிடம் வலியுறுத்தி வருவதாகவும் ராய்ட்டர் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தாமதிப்பதன் மூலம்

# அரசாங்கம் தவறான சமிக்ஞைகளை சர்வதேச சமூகத்திற்கு காட்டி வருகிறது

### ஜப்பான் வெளிவிவகார அமைச்சு அதிகாரி எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் அரசியல் பெறுமானத்தில் முழுக்கவனத்தையும் குவிப்பதற்குப்பதிலாக அதன் பொருளாதார பெறுமானத்திலேயே மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் பொருளாதார அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மொட்டோபிடே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில், தற்போது நிலவும் அரசியல் சர்ச்சைக்கு விரைவில் முடிவு காணப்பட்டாலே, அபிவிருத்திப் பணிகளை துரிதப் படுத்த முடியும்,

அரசியல் சர்ச்சைக்குக் காலம் தாழ்த்தாது தீர்வொன்றைக் காண்பதன் மூலம் தாமதங்களினால் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்க முடியும்,

இச்சர்ச்சைகளுக்குத் தீர்வு காணத் தாமதிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு தவறான சமிக்ஞை

(12ம் பக்கம் பார்க்க)

# ஹஜ் யாத்திரிகர்கள் 250பேர் சன நெரிசலில் சிக்கி மரணம்




(றியாத்)

புனித ஹஜ் பெருநாளுக்காக மக்காவுக்குச் சென்ற 250 பேர் சன நெரிசலில் சிக்கி மரணமாகியுள்ளனர்.

ஹஜ் நிகழ்வுக்கு செல்வோர் அங்கு சைத்தானுக்கு கல் எறியும் நிகழ்வில் பங்கு பற்றுவது வழக்கமாகும்.

அவ்வாறு கல் எறியும் நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதால் சன நெரிசல் ஏற்பட்டு அவர்கள் மரணமானார்கள்.

ஹஜ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக உலக நாடுகளில் இருந்து பெருமளவு மக்கள் சவுதி அரேபியாவுக்குச் சென்றுள்ளனர். இலங்கையில் இருந்து 5ஆயிரத்து 580 ஹஜ் யாத்திரிகர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து சென்ற எவரும் சன நெரிசலில் சிக்க வில்லை என சவுதிஅரேபியா வுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்சர் தெரிவித்தார்.

இதேவேளை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிட்சாட் பதியூதீன் இலங்கை ஹஜ் யாத்திரிகர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கூட்டணியின் கூட்டம் சுமுகமாக நடந்தது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் பலத்த பாதுகாப்பின் மத்தியில் அமைதியான முறையில் நேற்று நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்று வர நேரிட்டால் அதில் எவ்வாறு கலந்துகொள்வது என்று கலந்துரையாடப்பட்டது.

அண்மைக்காலமாக எதிரும் புதிருமாக செயற்பட்டு வந்த கூட்டணியின் தலைவர் வி.ஆனந்த சங்கரியும் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனும் நேற்று கைலாகு கொடுத்து ஒருவரை யொருவர் வரவேற்றுக்கொண்டனர். (வ)

## கூட்டணிக்குள் பிளவு கிடையாது

# தேர்தலை எதிர் கொள்ளத் தயார்

### கூட்டணியின் தலைவர் சங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

"தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள்ள இரண்டு மூன்று பேர்கள் தங்கள் கருத்துக்களை மற்றவர்கள் மீது திணிக்க முற்பட்டால் அதை வைத்துக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக ஒரு போதும் கூற முடியாது. அதனை ஏற்றுக் கொள்ள நான் தயாராகவும் இல்லை" இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கொழும்பில் உள்ள கூட்டணியின் காரியாலயத்தில் நடைபெற்ற பின் கருத்துத் தெரிவித்தபோதே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

நாட்டில் திடீர் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால் அதற்கு முகம் கொடுப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராகவுள்ளது. அத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு வேட்பாளர்கள் நியமனக் குழுவொ

(12ம் பக்கம் பார்க்க)

## வடக்கு அபிவிருத்திக்கு

# உலக வங்கி நிதியுதவி

### நட்டஈட்டுத் தொகையும் ஒரு லட்சமாக அதிகரிப்பு

(கொழும்பு)

உலக வங்கியால் உறுதியளிக்கப்பட்ட 4மில்லியன் அமெரிக்க டொலர் உதவியுடன் வடக்கில் அபிவிருத்தித் திட்டமொன்றை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ் அபிவிருத்தி; வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மின்சக்தி, நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு, விவசாயம், போன்ற பலதுறைகளில் ஏற்படுத்தப்படவிருக்கின்றது.

இத்திட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொருளாதார ஆலோசகர்கள், சமூகத் தலைவர்கள் மதத் தலைவர்கள், பேராசிரியர்கள், விடுதலைப் புலிகள் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பின்னரே தயாரிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இத் திட்டத்தினுள் சாவகச்சேரி நகர அபிவிருத்தியும் அடங்கும்.

அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா

(12ம் பக்கம் பார்க்க)

## பரிசளிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திற்கான கொடிக்கீதம் இயற்றும் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளர் என்.ஸ்ரீகெங்காதரன் கலந்துகொண்டு சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

பரிசு வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவிருப்பதால் பாடசாலை அதிபர்கள், ஆர்வலர்களைக் கலந்துகொள்ளும்படி யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் ந.சிவகடாட்சம் கேட்டுள்ளார். (தி)

# இந்தியா மீது பழிகளை சுமத்த நான் ஒரு போதும் விரும்பவில்லை

## ஆனந்தசங்கரி பி.பி.சிக்கு பேட்டி

(லண்டன்)

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம்



நிலவி வருவதால் அதனை ஒத்திவைப்பது சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் நல்லது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை பிற்போடுமாறு கோரியிருந்தமை குறித்து பி.பி.சி. தமிழ் சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காரணமாக சமாதான முயற்சிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு சமாதானமே கேள்விக் குறிக்குள்ளான தற்போதைய சூழ்நிலையில், இலங்கை - இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வது இந்தியாவிற்கு நல்லதல்ல.

நான் இந்தியாவை நேசிக்கின்ற ஒருவனாக இருக்கின்றமையினால், இவ் ஒப்பந்தம் தொடர்பான அவதூறுகளை வீணான பழிகளை இந்தியா மீது சுமத்தப்படுவதை நான் விரும்பவில்லை.

அத்துடன், இவ் ஒப்பந்தம் அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேலும் தாமதப்படுத்தும் எனவும் கூறப்படுகின்றது.

இலங்கையின் சமா தான நடவடிக்கைகளுக்கு இந்தியா தடையாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுகளும் இந்தியாமீது சுமத்தப்படலாம்.எனவே இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஒத்திவைப்பது நல்லது என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக் கூறினேன்.

இவைதவிர, நோர்வே தரப்பினர் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என பேரினவாத கட்சிகள் சில ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரி வந்துள்ளமை குறித்து எனது ஆட்சேபத்தையும் வெளிப்படுத்தினேன்.

நோர்வே தரப்பினரை எக்காரணம் கொண்டும் சமாதான நடவடிக்கையில் இருந்து விலக்கக் கூடாது என்பதையும் நான் அவரிடம் எடுத்துக் கூறினேன்.

மேலும், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றமையைக் காரணம் காட்டி பிரதமர் சமாதான நடவடிக்கைகளில் இருந்து நழுவிவிட்டார். இதனால் இப் பேச்சுவார்த்தைகளை நடத்த இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன் என்றார். (தி-62,10)

# கொழும்பில் நேற்று முதல் பாதுகாப்புத் தீவிரம்

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு தலைநகர் கொழும்பில் நேற்று முதல் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று முதல் சுதந்திர தினமான 4ஆம் திகதி வரை கொழும்புக்கான வாகனப் போக்குவரத்துக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குபடுத்தலின் பிரகாரம், நேற்று முதல் 4ஆம் திகதி வரை காலை 6.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், இன்றும், நாளையும் காலை 9.00 மணியிலிருந்து பகல் 12.00 மணி வரையும, சுதந்திர சதுக்கம், , விஜய சுந்தர மாவத்த, நீட் அவனியூ ஆகிய வீதிகள் போக்குவரத்துக்காக மூடப்பட்டுள்ளன.

இதேவேளை வெலிக்கடை, கல்கிசை, ஹைலெவல், நீர்கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் இருந்து கொழும்புக் கோட்டையை நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் யாவும் மாற்றுப் பாதைகள் ஊடாக பயணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க நேற்று முதல் காலை 6.00 மணியில் இருந்து நண்பகல் 12.30 மணிவரை காலி வீதியில் பழைய பாராளு மன்றக் கட்டடத் தொகுதி முதல் கொள்ளுப்பிட்டி வரையான வீதிகள் போக்குவரத்துக்காக மூடப்பட்டுள்ளன. (ம)

## திறப்புவிழாவும் கண்காட்சியும்

(கோப்பாய்)

ஊரெழு கணேச வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூட திறப்புவிழாவும், கண்காட்சியும் இன்று காலை 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீ.அருள்நேசன், கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.கதிர்காமர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-79)

# காணாமல் போனோர் விடயத்தில் அன்னையர் முன்னணி புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களை அவர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளுடனோ அன்றி அன்னையர் முன்னணி அங்கத்தவர்களுடனோ பேச்சுவார்த்தை நடாத்தி அறிந்துகொள்வதில்லை. மாறாக வெளிநாடுகளில் இருந்து வந்து இங்கு அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என்ற போர்வையில் இருப்பவர்களுடனும், பல்கலைக்கழக கல்விமான்கள் எனக் கருதும் பல்கலைக்கழக நிர்வாகிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதைக் கண்டித்து அன்னையர் முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக அன்னையர் முன்னணி வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில்,

கடந்த 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியில் கைதாகிக் காணாமற்போய், தற்போது சித்திரவதைகளுக்கு உட்பட்டு வாழும் எமது பிள்ளைகள் பட்ட சித்திரவதைகளை எம்முடனோ அல்லது பாதுகாவலர் சங்கத்துடனோ பேச்சுவார்த்தைகளை நடாத்தி விபரங்களைக் கேட்டறியலாம்.

இதைவிடுத்து அரச சார்பற்ற நிறுவனம் என்ற போர்வையில் உள்ளவர்களுடனும் பல்கலைக் கழகத்தில் கல்விமான்கள் எனக் கருதப்படும் அதன் நிர்வாகத்தினருடனும் இதுவிடயம் தொடர்பாக வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் பேச்சுக்களை நடாத்துவது நியாயமா?

எந்த அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதியின் மகன் அல்லது மகள் சித்திரவதைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்? எந்த மதகுரு அல்லது இந்துக் குருமாரின் பிள்ளைகள் இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர்? ஏன் இந்த ஏமாற்றுவேலை? யாருக்காக இவர்கள் இந்த ஏமாற்று வேலையைச் செய்கிறார்கள்?

இவ்விடயத்தில் அன்னையர் நாம் கண்ணீர் சிந்துகின்றோம். கவலையுடன் வாழ்கின்றோம். நாம் ஏன் இது விடயத்தில் பேச்சுவார்த்தையில் புறக்கணிக்கப்படுகின்றோம்? எமக்காகப் பேசுவதற்கு ஏஜண்டுகள் முளைத்துள்ளனர். அவர்கள் இற்றைவரை செய்தது என்ன? இதுவிடயம் தொடர்பாக உலக மனித உரிமைச்சபைக்குத் தெரியப் படுத்துகிறோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-18)

## பெண் போராளி சாவு

(கிளிநொச்சி)

பெண் போராளி ஒருவா கடந்த மாதம் 29ஆம் திகதி சுகவீனம் காரணமாக சாவடைந்துள்ளார்.

மட்டக்களப்பு கிண்ணையடியை நிரந்தர முகவரியாகவும், சொருவில் திம்புலாகலவையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கப்டன் நிலாந்தினி என அழைக்கப்படும் கந்தையா ரஞ்சினி என்ற பெண் போராளியே சாவடைந்துள்ளார்.

இம்மாவீரரிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (தி-64,10)

# கலைமேம்பாட்டுக் கழகத்தின் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட காத்தவராயன் கூத்து, இசை நாடகம், தென்மோடி நாட்டுக்கூத்து ஆகியவற்றின் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு :

**காத்தவராயன் கூத்து**

1ம் இடம் - மாதனை வேணுகானசபை

2ம் இடம் - ஸ்ரீஅம்பாள் கலையகம், சுழிபுரம்.

3ம் இடம் - நுண்கலை மன்றம், மானப்பாய் மெமோறியல் ஆங்கிலப பாடசாலை.

*ஆறுதல் பரிசு*

ஒளிநிலா நாடக மன்றம், சண்டிலிப்பாய்

இ.மதியழகன் குழுவினர், வல்வெட்டித்துறை.

இராசரத்தினம் குழுவினர், பண்டத்தரிப்பு.

**இசை நாடகம்**

1ம் இடம் - "பூதத்தம்பி" - வாகீஸ் வரிநாடக மன்றம், மயிலங்காடு சுன்னாகம்.

2ம் இடம் - "மயானகாண்டம்" - இணுவில் கந்தசுவாமி கோவில் தொண்டர் சபை.

3ம் இடம் - "நல்லதங்காள்" நுண்கலைமன்றம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

*ஆறுதல் பரிசு*

"மயானகாண்டம்" - சரவணை திருவள்ளுவர் கலாமன்றம்.

"சத்தியவான் சாவித்திரி" - கலைமகள் நாடக மன்றம், கொடிகாமம்.

**தென்மோடி நாட்டுக் கூத்து**

1ம் இடம் - "ஏரொடியாள் சபதம்" புனித நீக்கிலாஸ் நாடக மன்றம் நாவாந்துறை.

2ம் இடம் - "வீரபாண்டிய கட்டப் பொம்மன்" உதயசூரியன் நாடக மன்றம் பாசையூர்.

3ம் இடம் - "வேதநூல்" நவரச நாடக மன்றம், தெல்லிப்பழை.

*ஆறுதல் பரிசு*

"சங்கிலியன்" பதுவையூர் நாடக கலாமன்றம், கொழும்புத் துறை.

"நீதிகாத்த சோழன்" வளர்பிறை நாடக மன்றம், பாசையூர்.

"பண்டாரவன்னியன்" குருநகர் நாட்டுக் கூத்து மன்றம்.

"விக்கிரமாதித்தன்" மதனிகா நாடக மன்றம், பாசையூர். (தி)

# ஏ -9 பாதையை 24 மணிநேரமும் திறந்துவிடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையை பொதுமக்கள் பாவனைக்கு 24 மணி நேரமும் திறந்து விட உடன் நடவடிக்கை எடுக்கும்படி மனித உரிமைகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான யாழ்ப்பாண மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், படையினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வெள்ளி அன்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற மேற்படி குழுவின் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.சிறீபதி தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில், யாழ்.மாவட்டத்தில் உள்ள மனிதநேய அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றியிருந்தனர்.

இது விடயம் தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது,

ஏ - 9 பாதையை 24 மணி நேரமும் திறக்க அனுமதிக்காமல் இருப்பதன் மூலம், பொது மக்களின் போக்குவரத்துக்கான அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருகின்றது. அத்துடன் குடாநாட்டு மக்கள் தமது அவசர, அவசிய தேவைகள் நிமித்தம் குடாநாட்டுக்கு வெளியே செல்லவேண்டிய தேவைகள் இருக்கின்றபோதிலும் கூட, அவற்றினை நிறைவேற்ற முடியாதவாறு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாதையை முழு நேரமும் திறந்து பொதுமக்களுக்கு வசதியை ஏற்படுத்தும்படி பல தடவைகள் பல அமைப்புக்கள் மூலம் கோரிக்கைகள் விடப்பட்டு வந்துள்ளன.

இதேவேளை, ஏ - 9 பாதையை 24 மணி நேரமும் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும், படையினரும் சம்மதிக்கின்ற போதிலும் கூட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இது விடயத்தில் பாராமுகமாக இருந்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

பாதை திறத்தல் விடயத்தில் பாதையின் நுழைவாயில்கள் அமைந்துள்ள இடங்களில் மின்விநியோகம் இல்லாமை, ஐ.சீ.ஆர்.சி யிடம் போதிய ஆளணி இல்லாமை மற்றும் இதற்கு யார் பொறுப்பு? என்ற மூவகைப் பிரச்சினைக்கு முகம் நோக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, கொழும்பில் உள்ள மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஏ - 9 பாதை திறத்தல் பற்றிய விடயம் தொடர்பாக படைத்தரப்பினருடனும், தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் உயர் மட்டப் பேச்சுக்களை நடாததி வருவதாகவும் அறியப்படுகிறது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு முதல் ஏ - 9 பாதையை பொதுமக்களின் பாவனைக்கு என முழுநேரமும் திறந்து விடப்படுமா? என குடாநாட்டு மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (தி-16)

## சிறுவிளம்பரம்

**விற்பனை**

சகல விதமான T.Vகளுக்கு சிறந்தமுறையில் அன்ரனா பொருததிக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் அன்ரனா, பூஸ்டர், வயர், பைப்செற, அன்ரனா உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்:நியூசிற்றி ரேடேர்ஸ், 135கஸ்தூரியார் வீதி, (குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி எண்:222-3226

(C/7313)


# சமாதானத்தால் தமிழர்களுக்கு பயனில்லை அரசியல்வாதிகளிடம் கூறுங்கள்

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டவரைபு இறுதியானதும் முடிவானதுமாகும்.இனிமேல் வேறொரு திட்டவரைவு முன்வைக்கப்படப் போவதில்லை என்பதை தென்பகுதி மக்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் தெட்டத் தெளிவாக எடுத்துக்கூறுங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அரசியலமைப்பு விவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளிடம் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த சனியன்று மாலை இடம்பெற்ற சந்திப்பின் போது பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் 50பேர் வரை பங்கு கொண்டனர்.

ஒன்றியத் தலைவர் சுபரமநாதன் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அரசியல் விவகார அமைச்சின் ஆலோசகர்களான சிறீலால் லக்திலக, சட்டத்தரணி ரவி ஜயவர்த்தன,சட்டத்தரணி புஸ்பகுமார, கலிங்கதிஸ்ஸ, முருகேசன் பாலா ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அங்கு தொடர்ந்து குறிப்பிடும் போது,

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கடந்த காலங்களில் எத்தனையோ வரைவுகள் முன் வைக்கப்பட்டன. ஆயினும், எதுவுமே அரசுகளின் கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு வரைவும் தூக்கி வீசப்பட்ட வரலாறுதான் மிஞ்சியது. இனியும் இந்த நாட்டில் அப்படியான நிலை ஏற்படப் போவதில்லை.

### தொடரும் அவலநிலை

பிரிவினைக் கேட்ட விடுதலைப் புலிகள் இன்று சமஷ்டிக்கு வந்துள்ளனர். எனவே தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளை தென்பகுதி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்திருந்த போதிலும் கூட, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரவில்லை.

சிறைச்சாலைகளில் வாடுகின்ற ஆயிரக்கணக்கான தமிழர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட மக்கள் அங்கு மீளவும் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் அவல வாழ்வு இன்னமும் முடியவில்லை.

### தமிழருக்கு பயனில்லை

இந்நிலையில் சமாதானம் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்தவகையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தர்வினை எப்படிக் காண்பது? யுத்தநிறுத்தம் தென்பகுதி மக்களுக்குத்தான் நன்மையையும், பயனையும் அளித்துளளதேயொழிய வடக்கு-கிழக்கு மக்களுக்கு அல்ல என்று கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அங்கு கருத்துரை வழங்கும்போது,

தமிழ்மொழிக்கான உரிமை பற்றி அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும்கூட, அதனை அரசாங்கமும், அமைச்சுக்களும் உரியவாறு அமுல்செய்யவதில்லை. தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை என நாம் சுட்டிக்காட்டுகின்ற போதெல்லாம், அதுபறறி உடன் நடவடிக்கை எடுப்போம் என அமைச்சர்கள், அதிகாரிகள தரப்பில் கூறப் படுகிறதேயொழிய எதுவுமே நடைமுறையில் இல்லை.

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள் யாவுமே சிங்கள மொழியிலேயே அச்சிடப்படுகின்றன. மொழி உரிமையைக் கூட அரசாங்கம் மீறி வருகின்றது.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிறைக்கூடங்களில் குற்றப்பத்திரங்கள் சமர்ப்பிக்காத நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டவர்கள் அல்லர். குடிவரவு-குடியகல்வு சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் ஏன விடுதலை செய்யப்படவில்லை என்பது யாருக்குமே தெரியாது.

### உதாசீனம்

மேலும், வடக்கு-கிழக்குக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் கூட தமது பொறுப்புக்களை கைகழுவி விடுகின்ற நிலையிலேயே இயங்கி வருகின்றன. புனர்வாழ்வு அமைச்சும், இந்துசமய விவகார அமைச்சும் சில பணிகளைச் செய்துவருகினறன. ஆனால் சுமார் 30அமைச்சுகள் வரை வடக்கு-கிழக்குப் பிரசசினை விடயத்தில் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உதாசீனம் செய்தே வருகின்றன.

அவர்கள் தமது பொறுப்புக்களை நிதி வழங்கும் நாடுகள், சாவதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உளளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்கின்றார்கள். அரசியல் அமைப்பில சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மீறப்பட்டு வருகின்றன என்றார்.

இச் சந்திப்பின் போது திருமதி சறோஜா சிவச்சந்திரன், மாணவர் பேரவைத்தலைவர் எஸ்.கஜேந்திரன், எம்.கே.ஈழவேந்தன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா, இலஙகைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட இணைச் செயலாளா த.பஞ்சலிங்கம் உட்பட வேறும் பலர் கருத்துரை வழங்கினர். (தி-16)

# காவல்துறையால் கைது

(மருதங்கேணி)

மதுபோதையில சிறுவனின் கைகளை நைலோன் கயிற்றினால் கட்டிவைத்துத் தாக்கிய நபர் ஒருவர் கிளிநொச்சி காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி ஆனநதபுரத்தில் இடம் பெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

உறவினர் ஒருவரின் வீட்டில் வசித்துவந்த சிறுவனை மது போதையில் இருந்த மேற்படி நபர் நைலோன் கயிற்றால் கட்டிவைத்து பலமாகத் தாக்கியதைக் கண்ணுற்ற அயலவர்கள், உடனடியாக கிளிநொச்சி காவல் துறையினருக்கு அறிவித்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் மதுபோதையில் இருந்த நபரை கைது செய்ததுடன், பாதிக்கப் பட்ட சிறுவனை கிளி.மாவட்ட வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.(தி-35)

# மனோ – மலிக் குழு மீண்டும் இன்று சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி-பிரதமராகியோரிடையே பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் விதத்தில் இவ்விருவரது பிரதிநிதிகளும் மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

இன்று கொழும்பில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் மனோ தித்தவெலவும், பிரதமரின் சார்பாக ஐக்கியதேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமர விக்கிரமவும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இவ் உயர்மட்டக் குழு பல தடவைகள் சந்தித்து பேச்சுக்களை நடத்தி சில விடயங்களுக்கு இணக்கம் கண்டுள்ளது. இவ்வாறு இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்படும்.

இதேவேளை, கடந்த 30ஆம திகதி மனோ-மலிக் குழு சந்திக்க ஏறபாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஜனதிபதி தரப்பினரிடை யேயான முரண்பட்ட கருத்துக்களால் இச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(தி-4)

# யசோதா குறூப் கம்பனி குறித்து ஜனாதிபதி பிரதமரைச் சாடல்

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடரும் இவ்வேளையில், 4 பில்லியன் ரூபா நிலுவையிலுள்ள கடன் தொடர்பாக யசோதா குறூப் கம்பனி மக்கள் வங்கியுடன் இரகசிய பேரமொன்றை ஏற்படுத்துவது பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமரை நேரடியாகச் சாடியுள்ளார்.

யசோதாக் கம்பனியிடமிருந்து அறவிடப்படவேண்டிய பெருமளவு பணம் தொடர்பாக வெளிப்படையாக நடவடிக்கைகள் எடுக்கப் படாவிடில், நாட்டின் தலைவி என்றரீதியில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என ஜனாதிபதி மக்கள் வங்கித் தலைவர் லால நாணயக்காரவிற்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இக் கம்பனி தொடர்பான விடயங்களை விக்கிரம- வீரசூரிய என்னும் 3ம் தரப்பினருடன் கலந்துரையாடும்படி பிரதமரின் பொருளாதார ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம் மக்கள் வங்கிக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதியின் கடிதம் வெளிவந்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், ஜனாதிபதி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

யசோதாக் கம்பனியில் இருந்து பெறவேண்டிய நிலுவைப் பணத்தைப் பெறுவதற்கு மக்கள் வங்கி பல சட்டநடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நான் அறிவேன். இத்தகைய பல வழக்குகள் வங்கிக்கு சாதகமானதாகவே அமைந்திருந்தன. அத்துடன் மக்கள் வங்கி-நிலுவைப்பணம் தொடர்பாக 3ம் தரப்பு மத்தியஸ்தரான விக்கிரம விஜயசூரியவுடன் பேச்சு நடத்துமாறு பிரதமரின் பொருளாதார ஆலேசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் தெரிவித்திருந்ததை உங்களது வங்கி ஏற்றுக்கொண்டிருந்தது.

இவ்விடயத்தில் தர்க்கரீதியாக நியாயத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவில்லை. நீதிமன்ற உடன்பாடின்றி 3ம் தரப்பினருடன் கலந்துரையாடக்கூடாது. ஒரு தனி நிறுவனம் எத்தகைய அரசியல் பின்னணி இருந்தும் அதற்கு சலுகைகளை வழங்குவதை அரச வங்கிகள் மேற்கொள்ளக்கூடாது. நாங்கள் சட்ட நடவடிக்கைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-6)

# கும்பாபிஷேகம்

(வடலியடைப்பு)

வடலியடைப்பு துந்துவப்புல பாதாள வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிமுதல் பி.ப.2.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தப்படும்.

(தி-21)

# கடன் தொகையை அடைப்பதில் யாழ்ப்பாண மக்கள் முன்னணியில்

## மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள தாம் பெற்ற கடனை விரைவில் அடைத்து விட வேண்டும் என்ற நோக்குடன் செயற்படுகிறார்கள். இதனால் யாழ்ப்பாண மக்கள் மீது மக்கள் வஙகிக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் வங்கியின் மேலதிகப் பொது முகாமையாளர் மார்டீன் பெனாண்டோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த இவர், கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கியின் கிளைக் காரியாலயத்தில் வைத்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்தில் வங்கிக் கடன்களைப் பெறுவோர் தொகை வலுவாகக் குறைந்தே காணப்படுகிறது. இதனால் மக்கள் மத்தியில் கடனுதவி பெறும் ஆர்வத்தை உருவாக்க மக்கள் வங்கி பலவகையிலான கடனுதவித் திட்டங்களை யாழ்.மாவடடத்தில் அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், வியாபாரிகள், சுயதொழில் முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் நன்மை பெறுவர்.

இதற்கு ஏற்ப யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல மக்கள் வங்கிக்கிளைகளும் கணனி மயப்படுத்தப்படவுள்ளது. இதில் உடனடியாக முக்கியமான 5கிளைகளும், அடுத்த கட்டமாக ஏனைய 4 கிளைகளும இதனைத் தொடர்ந்து அனைத்து வங்கிக் கிளைகளையும் கனணி மயப்படுத்தப்படவுள்ளது.

எனினும் வங்கிகளில் வைப்புகளை செய்வதுபோல் கடனுதவிகளைப் பெற யாழ்.மாவட்ட மக்கள் முன்வருவதில்லை. இதற்கு இடப்பெயர்வுகளால் ஏற்பட்டுள்ள தாக்கங்களும், மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் கடன் வழங்கலுக்கு விதிக்கும் நிபந்தனைகளையும் காரணமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஏனைய மாவட்டத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சலுகைகளைப் போலவே யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களுக்கும் சம அளவிலான சலுகைகளை மக்கள்வங்கி வழங்கும. இதில் பாரபட்சம் எதுவும் கடைப்பிடிக்கப்படாது ஏனைய மாவட்டங்களில் உள்ள வாடிக்கையாளர்கள் மீதான நம்பிக்கையைவிட யாழ். மாவட்ட வாடிக்கையாளர் மீது மக்கள வங்கி அதிக நம்பிக்கை கொண்டுள்ளது. இதற்குக் காரணம் யாழ்.மாவட்ட வாடிக்கையாளர்கள் தாம் பெறும் கடனை விரைவில் அடைத்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

அத்துடன் ஏனைய மாவட்டங்களைவிட வைப்பாளர் தொகையும் வைப்புத் தொகையும் அதிகமாக காணப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக மிகுந்த விசுவாசத்துடன் நடந்து கொள்கிறார்கள் என்றார்.

அத்துடன் மக்கள் வங்கியினுடைய ஒவ்வொரு கிளைகளிலும் பல்வேறுபட்ட குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேசமயம் இவ்வாண்டிற்குரிய புதிய திட்டங்களும் அமுல்படுத்தப்படும் என்றார். (தி-4)

# ஸ்ரீ.சு.க. மத்திய குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இன்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடை பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள பற்றியும் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சயும் ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாவட்ட அமைப்பாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதற்கமைய, இது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (தி-60,10)

# தமிழ்க் கட்சிகளுக்கிடையே உட்பூசல் மக்களின் நலன்களில் அக்கறையில்லை

## மனோ கணேசன் எம்.பி. நக்கல்

**சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக கலந்து கொள்வதா? இல்லையா? என்பதை அரசாங்கத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருமே தீர்மானிக்க வேண்டும் என கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக கலந்துகொள்வதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு யாருக்குரியது? என்பது பற்றி ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேடசெவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இதுபற்றி கூறுகையில், சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தவர்கள் அரசாங்கத்தினர். சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அத்துடன், அரச படையினருக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே தான் போர் இடம்பெற்றது. இதனால், போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையவர்கள் இவ்விரு தரப்பினருமே.

எனவே, போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இச் சமாதானப் பேசசுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் கலந்து கொள்வதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும்தான் இருக்கிறது. இதனால் இவ்விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடனும், அரசாங்கத்துடனும் முஸ்லிம் கட்சிகள் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடொன்றிற்கு இரு தரப்பையும் கொண்டு வர முயற்சிக்கவேண்டும்.

இதனை விடுத்து விடுதலைப் புலிகளை விமர்சித்துக் கொண்டிருப்பதாலேயோ, அல்லது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதாலேயோ எவ்வித பயனுமில்லை. முஸ்லிம் சமூகத்தினருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள உரிமை இருக்கின்றது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தை யாரால் ஆரம்பிக்கப்பட்டதோ, அதனை ஆரம்பிக்க யார் காரணமாக இருந்தார்களோ, அவர்களுடன் பேசி அவர்களின் சம்மதத்துடன் பங்கு கொள்வது நாகரிகமானது என்பதையே நான் இங்கு முக்கியமாக கூற விரும்புகின்றேன்.

முஸ்லிம் சமூகமும் தனித்தனியான கௌரவமான ஓர் இனம். அவர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும். அவர்களின் அபிலாசைகளும் நிறைவேற்றப்படவேண்டும். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இடைக்கால நிர்வாக சபை குறித்த தமது ஆலோசனைகளை முன்வைக்கவுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அது வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டு சமாதானமே கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இவ் யோசனைகளை முன்வைப்பது சாத்தியப்படாததொன்றாகவே இருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான சந்திரசேகரன் ஈடுபட்டு வருகின்றதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 4 கட்சிகள் இணைந்து அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள்ளேயே கருத்து முரண்பாடுகளும், கட்சிப்பிளவுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், அத்தகைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மலையகக் கட்சிகளும் ஒன்றிணைத்து கொள்வது என்பது சாத்தியப்படாத விடயமாகவே இருக்கின்றது.

அத்துடன், மலையக மற்றும் தமிழ்க் கட்சிகள் தேர்தலுக்காக ஒன்றிணைந்துவிட்டு பின்னர் பிரிந்து கொளவதற்காக இருக்கக் கூடாது.

இதற்கிடையில், தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என கோரும் அமைச்சர் சந்திரசேகரன் மலையகத்தில் உள்ள ஏனைய கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒற்றுமையுடன் செயற்படுவாரா என்றால் அதுவும் இல்லை.

எனவே, மலையகக் கட்சிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதை விட தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காக இக்கட்சிகள் யாவும் ஒருமித்துக் குரல் கொடுப்பதே பொருத்தமானதாகும்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் அவர்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் அவர்களின் அபிலாஷைகள், அடிப்படைத் தேவைகள் ஆகிய விடயங்கள் குறித்துச் சகல கட்சிகளும் அதாவது, மலையகக் கட்சிகள், தமிழ்க் கட்சிகள் வேண்டுமானால், முஸ்லிம் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஒருமித்த குரலில் அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம் என்றார்.

(தி-61,10)

# செய்தித் துளிகள்

### தேசிய எழுச்சிப் பேரவை அங்குரார்ப்பணம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திற்கான தேசிய எழுச்சிப் பேரவை நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா வைரவ புளியங்குளத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேரவையின் செயலாளராக எஸ்.என்.ஜி.நாதனும், பொருளாளராக எஸ்.ஞானப்பிரகாசமும் தெரிவுசெய்யப்பட்டனர். 15 பேரைக் கொண்ட இவ் அமைப்பின் நிர்வாகசபையில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலனும் அடங்குவார். (இ-13)

### முறைசாராப் பரீட்சைகள்

(தம்பசிட்டி)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் கடந்த ஆண்டு முறைசாராக் கல்விநெறியைப் பயின்றவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை, கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் ஆகியவற்றில் உடையமைத்தல் பயிற்சிகளை மேற்கொண்டவர்களுக்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சிகளை மேற்கொண்டவர்களுக்குமான பரீட்சைகள் எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மாகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

அத்துடன், சாவகச்சேரி இந்துக்கலலூரிக்கான கணனிப் பரீட்சை எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் அந்தந்தப் பரீட்சைத் தினங்களில் தமக்குரிய ஒப்படைகளைக் கொண்டுவருமாறும் தென்மராட்சி வலயகல்விப் பணிப்பாளர் வ.செலவராசா அறிவித்துள்ளார். (தி-45)

### நெற்செய்கை பாதிப்பு

(நவாலி)

போதிய மழை கிடைக்காததால் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை படிப்படியாக அழிவடைந்து வருகின்றது.

இதனால் நவாலி, சங்கரத்தை, ஆனைக்கோட்டை மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நெற்செய்கையை மாத்திரம் பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்துவரும் சுமார் 500 விவசாயக் குடும்பங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(தி-102)

### திறப்புவிழா

(மருதங்கேணி)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனக் காரியாலயம் பிரதான வீதியில் உள்ள வடமாகாண கடற்றொழிலாளர் சமாசக் கட்டடத்தின் ஒரு பகுதியில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது. (தி-35)

### துக்கதினம் அனுஷ்டிக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

இலங்கையின் சுதந்திரதினமான எதிர்வரும் 4ஆம்திகதியை தமிழர் தாயகத்தில் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பேரவை மன்றம் கேட்டுள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றையும் மக்கள் பேரவை மன்றம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கையின் சுதந்திரதினமான எதிர்வரும் 4ஆம் திகதியன்று தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிடுவதுடன், இலங்கையின் தேசியக்கொடியேற்றி நடாத்தப்படவுள்ள சுதந்திரநாட் கொண்டாட்டத்தில் தமிழ் ஊழியர்கள் எவரும் கலந்துகொள்ளவேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(உ-64,10)

### படகுகளைப் பராமரிக்க மீனவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 42 பேரும் அவர்களின் படகுகளைப் பராமரிப்பதற்காக நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களின் படகுகளைப் பராமரிப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு வழங்கியது.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீனவர்களின் 62 படகுகள் கடற்படையினரின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### முத்திரைவெளியீடு

(தம்பசிட்டி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நினைவு முத்திரையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் க.கைலாயநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரட்ணம் நினைவு முத்திரையை வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் என்.ரவிராஜ், கொழும்பு முத்திரை வெளியீட்டுப்பிரிவின் பணிப்பாளர் சின் சிறிவிமலரட்ண, யாழ். மாவட்டப் பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (தி-45)

### குருநகர் புதுமை மாதா திருவிழா

(குருநகர்)

குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா நாளை செவ்வாய்கிழமை காலை 5.00 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.இதற்கான ஆரம்ப முன்னேற்பாட்டு வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளன. (தி-121)

புனித ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்
JAZEEMA PICTURE PALACE
ஜெஸீமா பிக்சர் பலஸ்
308, 304, 302, K.K.S. Road, Jaffna.
★ அலுமக்ஸ் அலுமினியம் பார்
★ லங்கா அலுமினியம் பார்
★ கிளாஸ் எல்லா வகைகளும்
★ ஜன்னல் கண்ணாடிகள் விதம்விதமான டிசைன்களில்
★ PLY WOOD, MQF BOURD வகைகள்
★ FORMILA, EMPOSS P.V.C SHEET வகைகள்
கதவு பூட்டு, பித்தளைப் பிணைச்சல், திறாங்கு வகைகள்
MULTI BOND CUM வகைகள்,
அலுமினியம் கட்டர் போன்ற
அனைத்துப் பொருட்களையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் தரமாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்:
ஜெஸீமா பிக்சர் பலஸ்
T.P:- 021 222 3124
Fax:- 222 3124

## இன்று ஒரு தகவல்

# மரமும் சிகிச்சையும்

"சார்! எங்கள் வீட்டின் பின்புறத்தில் உள்ள மரத்திற்கு உடல் நிலை சரியில்லை... அனேகமாக அந்த மரத்திற்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியிருக்கும் என எண்ணுகின்றேன். நீங்கள் கொஞ்சம் வந்து பார்த்தால் நல்லது"

இப்படி யாராவது உங்களிடம் வந்து கூறினால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? சொன்னவரை ஒரு மாதிரிப் பார்ப்பீர்கள்! ஜப்பானில் இப்படி யாராவது கூறினால் அங்கே இது ஆச்சரியமான ஒரு விஷயம் இல்லை. ஏனென்றால் அங்கே மரங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் டாக்டர் ஒருவர் இருக்கிறார். அவரது பெயர் தடாஹிகோ யாமானோ!

அவருக்கு இப்போது 90 வயதிற்கும் அதிகமாம். அங்கே எல்லோரும் அவரை மர டாக்டர் என்றே அழைப்பார்களாம். அதாவது மரத்திற்கு வைத்தியம் செய்யும் டாக்டர். இனிமேல் பிழைக்காது பட்டுப்போய்விடும் என்ற நிலையில் உள்ள மரங்களையெல்லாம் அவர் பிழைக்கவைத்து விடுவாராம். 10 பயிற்சி டாக்டர்களும் அவருக்குத் துணையாக இருக்கின்றனர். இதுவரை ஆயிரம் மரங்களுக்கு மேல் அவர் காப்பாற்றியிருக்கின்றாராம். மரங்களுக்கு சிகிச்சையளிக்க அவர் சில விஷேட வைத்திய முறைகளை உருவாக்கியுள்ளாராம்.

நாமெல்லாம் டாக்டரிடம் போனால் உடனே நமது கையைப் பிடித்துப்பார்த்து நாடி பார்த்து என்ன கோளாறு எனக் கண்டுபிடிக்கின்றார் அல்லவா அதுபோல் அவர் என்ன செய்வார் என்றால் ஆரம்பத்தில் உள்ளங்கையை வைத்துப் பார்த்து அந்த மரத்தில் என்ன கோளாறு என்பதைக் கண்டு பிடிப்பாராம் அவ்வளவு அனுபவம்.

ஒரு மரத்திற்கு வைத்தியம் பார்க்கவேண்டும். வாருங்கள் என்று அவரைக் கூப்பிட்டால் உடனே அதற்கான கருவிகள், மருந்துகள் எல்லாவற்றையும் தயார்செய்து உதவியாளர்களையும் கூட்டிக்கொண்டு வந்துவிடுவாராம்.

அவர் வைத்தியம் செய்வது எப்படித் தெரியுமா? முதலில் மரத்தின் மேலே 15 மீற்றர் உயரத்திற்கு உருக்குக் குழாய்களைக் கொண்டு சாரம் கட்டுவார். அதன் பின் மரத்தில் உளுத்துப்போன பகுதிகளை வெட்டியோ அல்லது சுரண்டியோ எடுப்பார். அதன் பின் அந்த இடத்தில் இவர் தான் தயாரித்த விஷேட மருந்து கலந்த ஒருவகைப் பசையைப் பூசுவார். பிசின் போன்றது அது பாதிக்கப்பட்டபகுதியில் ஈரம் படாமல் பார்த்துக்கொள்ளும்.

அடி மரத்தின் உள்பகுதியில் மரம் உளுத்து ஒன்றும் இல்லாமல் போயிருந்தால் அந்த இடங்களில் வெளிப்புறத்தில் கம்பி வலையைச் சுற்றுவார். அதன் மேல் ஒரு கலவையை பூசுவார் அவ்வளவுதான். கொஞ்ச நாட்களில் மரத்திற்குப் புத்துயிர் கிடைக்கும். "மரங்கள் லேசில் மடியாது" என்கிறார் அவர்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு மரம் தற்கொலை பண்ணிக்கொண்டது என்று கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அப்படியாகாது. சரியான சமயத்தில் நாம் கொஞ்சம் கவனித்து உதவி செய்தால் போதும். அதற்குப் பின்பு அது சொந்த பலத்தில் பிழைத்துக்கொள்ளும் என்கிறார். "இனி இந்த மரம் பிழைக்காது என்று நீங்களாக ஒரு முடிவு செய்து கொண்டு மரத்தை வெட்டி விடாதீர்கள். மரங்களை வெட்டவே கூடாது" என்று கண்டிப்புடன் கூறுகிறார் அவர்.

முன்பெல்லாம் அவரே மரத்தின் மேல் ஏறி வைத்தியம் செய்ய ஆரம்பித்து விடுவாராம். இப்போது அவருக்கு வயதாகி விட்டதனால் அவரது உதவியாளர்கள் அவரை மரத்தின் மீது ஏறவிடுவதில்லை. அதனால் இப்போது அவர் கீழேயே நின்று தொலைகாட்டி மூலமாக மேலே பார்க்கின்றார். இங்கிருந்து கொண்டே அறிவுறுத்துவார். அவரது உதவியாளர்கள் அங்கே போய் வைத்தியம் செய்வார்கள்.

வருங்காலத்தில் மரத்திற்கு வைத்தியம் செய்யும் டாக்டர்கள் இன்னும் அதிகமாக ஆனாலும் ஆகலாம். அதைப்பற்றி ஒரு கற்பனை. இன்னும் ஒரு நூறு வருடங்கள் கழித்து இப்படி நடப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்.

ஒருவர் வேகமாக ஓடி வருகிறார். ஒரு மர டாக்டரிடம் "டாக்டர்... எங்கள் தோட்டத்தில் உள்ள ஒரு மரத்திற்கு உடல் நிலை சரியில்லை. உடனே நீங்கள் வந்து பார்க்கவேண்டும்" என்றார். டாக்டர் மெதுவாகத் தலைநிமிர்ந்து பார்த்து " என்ன மரம் அது?" என்கிறார். "பூவரசு மரம்" என்றார் வந்தவர். உடனே இவர் "மன்னிக்கவும்! அதற்கான மருத்துவர் அடுத்த கட்டடத்தில் இருக்கிறார். நான் புளிய மரத்திற்கான டாக்டர்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புத்தளத்தில் தமிழ் வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் புத்தளம் மாவட்டத்தில் முற்றிலும் தமிழ் வேட்பாளர்களைக் கொண்ட குழு ஒன்று போட்டியிடவுள்ளது.

புத்தளத்தில் உள்ள தனித்தமிழ்க் கிராமமான உடப்புக் கிராமத்தை மையமாகக் கொண்டு இந்த அணி தேர்தலில் போட்டியிடவுள்ளது. சுமார் 35 ஆயிரம் தமிழ்வாக்காளர்கள் வாழும் இக் கிராமத்தில் உள்ளனர். இவ் வாக்குகள் அனைத்தும் ஒன்று சேருமிடத்து இரு மாகாண சபை உறுப்பினர்களையாவது தெரிவு செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான கலந்துரையால் ஒன்று நேற்றுக் காலை புத்தளத்தில் இடம்பெற்றது. இதில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார். (கி-4)

# தமிழ் - முஸ்லிம் பிணக்குத் தீர்ந்தால்

## சமாதானப் பேச்சுக்கள் வெற்றி

### வசீர் சேகுதாவுத் நம்பிக்கை

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப்புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி பொதுவான இணக்கப்பாட்டுக்குவரவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வசீர்சேகுதாவுத் ஏறாவூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாடசாலை நிகழ்வொன்றின் போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கு இடையிலான பிணக்குகளுக்கு பொதுவான தீர்வுகளை காணுவதன் மூலமே சமாதானப் பேசுக்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும்.

இந்த வகையில் இவ்விரு இனங்கள் இடையேயும் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இணக்கப்பாடு காணப்படு அவசியம்.

இடைக்கால நிர்வாக சபைக்கான ஆலோசனைகளை அனைத்துத் தரப்பினரும் ஒத்திவைத்துள்ள சூழ்நிலையில், வெளிநாட்டு உதவிகளை பகிர்ந்து கொள்ள அனைவரும் ஆர்வமாகவுள்ளனர்.

தமிழ் மக்களைப் போலவே முஸ்லிம் மக்களும் பேரினவாதிகளால் அடக்கப்பட்டு வருகின்றனர். இதனை தமிழீழ விடுதலைப் புலிகளும் நன்கு அறிவர்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளும் காலம் வந்துவிட்டது. ஆனால் முஸ்லிம் களைப்பற்றி எவரும் இதுவரை அக்கறை காட்டவில்லை. இதனால் தான் கடந்த 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கூட முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முஸ்லிம்களும, தமிழர்களுமே கூடுதலாக வாழ்ந்து வருவதனால், அவர்களது பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தவேண்டும். இதனடிப்படையில் தான் ஒரு சுமுகமான நிலைக்கு தமிழ், முஸ்லிம் மக்களால் வரமுடியும் என்றார். (தி-61)

# சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் ஊழியருக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு ஒன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

10 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஊழியர்கள் ஓய்வு பெறும் போது ஒவ்வொருவருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதன்படி 10 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர் ஒருவருக்கு, அவர் ஓய்வு பெறும் போது எடுக்கும் அடிப்படைச் சம்பளத்தின் 1.5 சதவீத கொடுப்பனவும்,

வருட சேவையைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு அவரது அடிப்படைச் சம்பளத்தின் 15 சதவீதக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் 50-53 வயதுக்கு இடைப்பட்ட ஊழியர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில் அவர்களுக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 50 வயதைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு அடிப்படைச் சம்பளத்தின் 9 மடங்கும், 51 வயதை பூர்த்தி செய்தவருக்கு 8 மடங்கும், ஒரு தடவையில் நட்ட ஈடாக வழங்கப்படும்.

52 வயதை பூர்த்தி செய்தவருக்கு 7 மடங்கு அடிப்படைச் சம்பளமும், 53 வயதைப் பூர்த்தி செய்தவருக்கு 6 மடங்கு அடிப்படைச் சம்பளமும் நட்ட ஈடாகக் கிடைக்கும்.

இதேவேளை ஓய்வு பெறும் ஒருவருக்கு அவர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் எஞ்சிய காலப்பகுதிக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும்.

ஓய்வு பெறும் ஒருவர் ரயில்வே அதிகார சபைக்கு 27 ஆயிரத்துக்கு அதிகமான கடனை செலுத்த வேண்டி இருந்தால், இக் கொடுப்பனவில் இருந்து 24 ஆயிரம் ரூபா கழிக்கப்படும் என அரச ஊடகப் பேச்சாளா அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## இராசிபலன்

02. 02. 2004

(தை 19, திங்கட்கிழமை)

| | |
|---|---|
| ஏகாதசி | முற்பகல் 9.46 மணிவரை |
| மிருகசீரிடம் | முன்னிரவு 9.34 மணிவரை |
| இராகுகாலம் | 8.06-9.36 மணிவரை |
| சுபநேரம் | 12.36-2.06 மணிவரை |

பீம ஏகாதசி விரதம்

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி போசன நன்மை, மேன்மை.

**இடபம்**
வாக்கு கலகம், பித்த ரோகம், முயற்சி தாமதம், மாதர் நட்பு.

**மிதுனம**
பெரியோர் ஆதரவு, சிந்தனை மிகுதி, எதிர்பாராத நன்மை, தேக நலன்.

**கடகம்**
பிரயாண அலைச்சல், சயனசுகக்குறைவு, சுபசெலவு, உறவினர் சந்திப்பு.

**சிங்கம**
இஷ்ட சித்தி, சந்தோசமான சம்பவம், பெருமையடைதல், பொருள்சேர்க்கை.

**கன்னி**
தொழில் நன்மை, அதிகாரம், தூரதேசச் செய்தி, பிரயாணம்.

**துலாம்**
கட்டுப்பாடு, சத்துரு பயம், புதிய சிந்தை, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
திருடர் பயம், ஆரோக்கியக் குறைவு, தொழில் கஷ்டம், இடமாற்றம்.

**தனுசு**
சௌக்கிய விருத்தி, சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் நன்மை, தனவரவு.

**மகரம்**
சத்துரு ஜெயம், கோபப்படுதல், காரிய சிந்தை, தொழில் நன்மை.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, சகோதரர் வழி நன்மை, நல்ல முயற்சி.

**மீனம்**
மாதா சுகம், நல்ல மனைவாசம், மனச் சோர்வு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## 120 மில்லியன் நிதி செலவில்

# கிளி. மாவட்டத்திற்கு குடிநீர்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுமார் 120 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட - கிழக்கு பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஜி. கே. சரீமால் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் வகையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பல செயற்திட்டங்களை ஆரம்பித்துத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்திற்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சுமார் 120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. (தி-35)

# ம.ஐ.சு. முன்னணியுடன் நான்கு கட்சிகள் கூட்டு

## இன்று உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து அமைத்துள்ள "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில்" மேலும் 4 அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன.

இந் நான்கு கட்சிகளும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சாவதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடவுள்ளன.

மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, தேசவிமுக்தி ஜனதாக்கட்சி ஆகிய நான்கு கட்சிகளுமே இவ் உடன்படிக்கையில் இன்று கைச்சாத்திடவுள்ளன.


இதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்நான்கு கட்சிகளின் தலைவர்களும் செயலாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர். (தி-60,10)

# புனித ஹஜ் பெருநாள்


## சிறப்பு மலர் - 02.02.2004

கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் கலாசார அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் இணைப்பாளரும், மக்கள் பணிமனையின் தலைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஜம்மியத்துல் உலாமா சபை (மார்க்க அறிஞர் சபை)யின் தலைவருமான மௌலவி B.A.S.சுபியான அவர்களின்

### ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தி



புனிதமான இத்தியாகத் திருநாளில் உலகமெல்லாம் முஸ்லிம் மக்கள் சந்தோஷத்துடன் நிலைத்திருக்கும் இந்நாளில் ஹஜ் கடமைகளைச் செவ்வன செய்வதற்கு புனித ஆலயமான க:பதுல்லாஹ்வை தரிசித்து விட்டு இறைவனின் அன்பையும் அருளையும் எதிர்பார்த்தவர்களாக மக்கத்து மண்ணில் உலக முஸ்லிம்களெல்லாம் ஒன்று கூடி இருக்கும் இவ்வேளையில் அனைத்து முஸ்லிம்களும் வல்ல இறைவனின் அன்பையும் அருளையும் பெற்றவர்களாக சகல மதத்தவர்களுடன் அன்புடனும், பண்புடனும் நடந்து சாந்தியையும், சமாதானத்தையும் முளையிடச் செய்யவேண்டுமெனவும், நாட்டின் யுத்த மேகங்கள் நீங்கி சமாதானம் மலர வேண்டும்மெனவும் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், வெவ் வேறு இடங்களிலும் அவதிப்படும் அனைத்து மக்களுக்கும் தமது சொந்த இடங்களின் மீளக் குடியேறுகின்ற நிலைமைகள் உருவாவதற்கு நாம் யாவரும் அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டுமெனவும் சமாதானம் இம் மண்ணில் நிலைபெறச் செய்யவேண்டுமென்றும் இத் தியாகத் திருநாளில் வாழ்த்துகிறேன்.



## மனித ஒழுக்க விழுமியத்தை கற்றுத் தரும் புனித ஹஜ்

ஹஜ்செய்வதற்கு வசதிபடைத்த முஸ்லிம்கள் அதாவது கஅபா வரை போய் வரும் வசதிபடைத்த சகோதரர்கள் ஒவ்வொரு ஊரிலும் அதிகமாகவே இருக்கின்றனர்.ஒவ்வொரு நகரத்திலும்.ஆயிரக் கணக் கானவர்கள் இருக்கின்றார்கள். ஒவ் வொரு ஆண்டும் அவர்களில் பலர் ஹஜ்ஜை நாடிப் புறப்படுகின்றார்கள். ஹஜ்ஜீக் காலம் வந்ததும் உலகில் முஸ் லிம்கள் வாழ்கின்ற ஒவ் வொரு மூலையிலும் இஸ் லாமிய உணர்வுகள்,இஸ் லாமிய வாழ்க்கை எப்படி விழித்தெழுகின்றது? எப்படிப்பட்ட துடிப்பு ஏற்படுகின்றது. எவ்வளவு காலத்திற்கு நீடித்திருககின்றது என்று இப்போது நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.

ஒவ்வொறு ஹாஜியும் ஹஜ் செய்ய நினைக்கிறார் அந்த நினைப்பு ஏற்பட்டதும் இறையச்சம், கட்டுபபாடு, பாவத்திலிருந்து மீளுதல் (தவ்பா), பிழை பொறுக்க மன்றாடுதல, நற்பண்பு ஆகியவற்றின் தன்மை அவர்மீது படர ஆரம்பிக்கின்றது அவர் தமது உறவினர், நண்பர்கள், தொழிலார் சம்பந்தப்பட்டவர்கள் மற்ற வகைத் தொடர்பு உள்ளவர்கள் ஆகியோரிடம் விடைபெறுகிறார். தான் இப்போது முதலிலிருந்த மனிதன் அல்லன், இறைவன்பால் காதல் ஏற்பட்டு விட்ட காரண ததினால்தன் மனம்தூய்மை அடைந்து கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்தி, அவர்களுடன் தனது குறைபாடுகளை சரிசெய்ய ஆரம்பிக்கிறா ஒவ்வொரு ஹாஜியின் மனத்திலும் செயலிலும் ஏற்படும் இத்தகைய மாற்றத்தினால் உண்டாகும் விளைவு எத்தனை மக்கள் மீது படரும் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள் ஒவ்வொரு ஆண்டும் உலகின் பல்வேறு பகுதிகளில் சுமார் ஒரு இலட்சம் பேரே ஹஜ்ஜீக்குத் தயாரானாலும் அவர்களில் மேற் கூறிய நன்மை எத்தனை இலட்சம் மக்களின் ஒழுக்கத்தைச் சீர் செய் யும் என கணித்துக் கொள்ளுங்கள் எனவே ரம்ழான் மாதமே இஸ்லாமிய உலகம் முழுவதற்கும் இறையச்சத்திற்கான காலமாக இருப்பது போல ஹஜ்காலம் என்பது மண்ணகம் முழுவதிலும் இஸ்லாமிய வாழ்க்கைக்கும் விழிப்புக்குரிய காலமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது மார்க்கத்தை அமைத்த பேரறிஞன் வல்ல அல் லாஹச் இந்த வழியில் இப்படிப் பட்ட நிகரற்ற ஏற்பாடு செய்து விட்டான். எனவே இறைவன் நாடினால் இறுதித்தீர்ப்பு நாள் வரை இஸ்லாத்தின இந்த அகில உலக இயக்கம் அழியாது உலகின் சூழல்கள் எவ்வளவுதான் மாறினாலும் காலம் எவ்வளவுதான் மோசமாகி விட்டாலும் சரியே கொஞ்சம் கண்களை மூடி இந்தக் காட்சியைத்தான் கற்பனை செய்யுங்கள் கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும, மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், எண்ணிலாச் சமுதாயத்தவாகள் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஆயிரக் கணக்கான வழிகளில் ஒரே கேந்திரத்தை நோக்கி நடை போட்டவர்களாக இன்று புனித மக்கத்து மண்ணிலே ஒன்று சேர்ந்து இருக்கின்றார்கள் ஒரே இலக்கைக்கொண்டு ஒன்று கூடி இருக்கிறார்கள். உலகம் முழுவதிலும் உள்ள சமுதாயங்களிலிருந்து வெளியேறி வந்திருக்கின்ற மக்கள் ஒரே கேந்திரத்தில் ஒன்று கூடுவது அதிலும் இப்படிப்பட்ட ஒரே மனப்பான்மை ஒரே நோக்கம் ஒரே எண்ணம் ஒரே குறிக்கோள் புனிதமான உணர்ச் சித்துடிப்புக்கள் புனிதமான சிந்தனைகள் புனிதமான செயல்கள் ஆகியவற்றோடு ஒன்று கூடுவது உண்மையில் பெரியதொரு பேறாகும் ஆததத்வுடைய வழித்தோன்றல்களுக்கு இந்தப் பேற்றினை இஸ்லாம்தான் கொடுத்திருக்கின்றது உலகில் வாழ்ந்த சமுதாயங்கள் ஒன்றோடொன்று சந்தித்தே வந்திருக்கின்ற ஆனால் அவை எந்தவகையில் தெரியுமா? போர்க்களத்தில் கழுத்தை அறுப்பதற்காக ஓர் இனத்தின் உரிமையை பறிப்பதற்காக நசுக்குவதற்காக சமாதான மாநாடுகளில் நாடுகளை பிரிப்பதற்காக மற்றோர்களின் நஷ்ட கஷ்டத்திலிருந்து தாம் லாபம் தேட முயற்சி செய்வதற்காக எல்லா நாடுகளையும் சேர்ந்த பொதுமக்கள் உளத்தூய்மையோடு இணைவது மன ஒற்றுமையுடனும் ஆத்மீக ஒற்றுமையுடனும் இணைவது எண்ணங்கள் செயல்கள் நோக்கங்கள் ஆகியவற்றின் ஒருமைப்பாட்டுடன் இணைவது, ஒரு தடவை மட்டும் தான் என்றில்லாமல், எப்போதும் நிரந்தரமாக ஒவ்வோர் ஆண்டும் ஒரே கேந்திரத்தில் இவ்வாறு ஒன்று கூடிக் கொண்டு இருப்பது ஆகிய இந்தப் பேறு இஸ்லாத்தைத் தவிர்த்து வேறு எங்கேயாவது மனித இனத்திற்குக் கிடைக்கிறதா என்ன? உலகில் சமாதானத்தை நிலைப்படுத்த நாடுகளுக்கிடையே நிலவும் பகைமையை அழிக்க சண்டைக்கும் வம்புக்கும் பதிலாக அன்பையும் சகோதரத்துவத்தையும் தோற்றுவிக்க இதை விடச் சிறந்த ஓர் ஏற்பாட்டை யார்தான் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்? எனவே புனிதமான இந் நாட்களில் இனங்களிடையே நல்லுறவு வளர்ந்தோங்க இறைவனை பிரார்த்தனை புரிவோமாக.

**மலர் அமைப்பு-ஆக்கம்**
மௌலவி எஸ்.எம்.ஸஹீல்
மக்கள் பணிமனை

### வளமொடு வாழ வழிகாட்டு

புனிதமிகு – ஈதுல் அல்காவே! – பூரிப்படைகிறது
என் நெஞ்சு
உன் வரவின் – நன்நாளை – எண்ணி
உன் வசந்தம் – வீசும் வரவினை – ஏழை நான்
எதிர்பார்த்துக்
கொண்டிருந்தேன் – தியாகத்தை –
நெஞ்சங்களுக்கு – நேசம்
கொள்ளச் செய்த – நபி இப்ராஹீமின் –
வரலாறு – ஆயிரம்
இப்ராஹீம்களை – மண்ணில் – முளையிடச்
செய்திருக்கிறது –
வசந்தத்தைக் கொண்டுவரும் – வள்ளல் உன்
வலிமையினை–காணத் துடித்துக்கொண்டிருந்தேன்–
இன்று நீ வந்து விட்டாய் அல்ஹம்துலில்லாஹ்
ஒற்றுமையெனும் உயர்குணப் பண்பு –வற்றிவிட்ட
இவ்வையகத்தில் – வளமோடு வாழ வழிகாட்டும்
உன் வருகை – இம்மண்ணில் சாந்தியை
சமாதானத்தை ஏற்படுத்தட்டும்

**கவியாக்கம்:- S.M.ஸஹீல்**


அன்பர்கள் ஆதரவாளர்களிற்கு புனித ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்

ரஹ்மான் ஹோட்டல் ஸ்தாபனத்தினர்

யாழ். நகரிலே சுவையான கோழிப்புரியாணி, கொத்து ரொட்டி, நெய் மஸ்கட் மற்றும் சுவையான அனைத்துச் சிற்றுண்டி வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

ரஹ்மான் ஹோட்டல்
220, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்

றியோ ஹோட்டல்

யாழ்ப்பாணம் பிரதான வீதி இல. 57ல் பல வருடங்களாக இயங்கிவந்த எமது றியோ ஹோட்டல் மீண்டும் இன்றுமுதல் அதே இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இங்கு ஹலால் முறைப்படி தயாரிக்கப்பட்ட

கோழி புரியாணி, கொத்து ரொட்டி, கட்லட், பெட்டீஸ், சமூலா, நெய் மஸ்கட், ஸ்வீட் வகைகள், முட்டை ரொட்டி, பராட்டா ரொட்டி, பிஸ்டேக், ஆட்டுக்கறி, குளிர்பானவகைகள், கேக் வகைகள், வட்டிலப்பம்

போன்ற சகலவிதமான நாவுக்கு ருசியான உணவு வகைகளுடன் மூன்று நேர உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளவும் விசேட வைபவங்களுக்கு தேவையான உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பவற்றுக்கான ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தரமாகவும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம். RIO HOTEL,No57,Main Street Jaffna.

வாப்பா லேதர் ஸ்பொட்

ஸ்தாபனத்தாரும் ஊழியர்களும் இணைந்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் தமது இனிய ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்

வாப்பா லேதர் ஸ்பொட்
இல. 11, யாழ். ஜும்மா மொஸ்க்லேன், யாழ்ப்பாணம்.

அன்பர்கள் அனைவருக்கும் ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துக்கள்
நவநாகரிக சிறுவர் ஆடைகளா? மகளிருக்கான நவீன சாறி வகைகளா? ஆடவருக்கேற்ற றெடிமேட் உடுப்புக்களா? அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

ஹப்பி ரெக்ஸ்
இல. 163, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கும் அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளங்கனிந்த ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துக்கள். நீங்கள் விரும்பும் உடலுக்கு ஏற்றதும் ஊட்டத்திற்கேற்றதுமான
★புரியாணி வகைக்கள் ★றொட்டி வகைகள் ★ சிற்றுண்டி வகைகள்
மற்றும்பல உணவுப் பொருட்களை சுவையுடன் தயாரித்து வழங்குபவர்கள்

முஸ்லீம் ஹோட்டல்
முட்டாஸ்கடைச் சந்தி,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் மாணவர்களே

**மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்**
**ஆசிரியர்களா?**
**மாணவர்களா?**
**பெற்றோர்களா?**
என்ற தலைப்பில் ''**மாணவர்களே**'' காரணமென சாடுகிறார்
**வ.சின்னப்பா**

## விவாத அரங்கு

வ.சின்னப்பா
(ஓய்வுபெற்ற அதிபர்)

மாணவரின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் ஆசிரியரா? மாணவரா? பெற்றோரா என்ற விவாத அரங்கிலே மாணவரின் கல்வி வீழ்ச்சிக்கு மாணவரே காரணம் என்ற எனது கருத்தை வெளிப்படுத்தி உண்மையை நிலைநாட்ட விரும்புகின்றேன்.

மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய முத்தரப்பினரது பங்களிப்பும் மிக அவசியம் எனினும், அதன் வீழ்ச்சியைப்பற்றிச் சிந்திக்கும் போது பெற்றோரைப் பொறுத்த வரை சராசரியாக எந்தவொரு பெற்றோரும் தனது பிள்ளை பாழபட்டுப் போவதை விரும்பமாட்டார். தனது பிள்ளை படித்து முன்னேறவேண்டும் என்பதே பெரும்பாலான பெற்றோரின் விருப்பமாகும். எனவே, பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் என்று சொல்லுவது பொருந்தாது.

பண்டைக் காலங்களிலே பல வறிய பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வேண்டிய சரியான உடுப்புக்கள், புத்தகங்கள் முதலியவற்றை வாங்கிக்கொடுக்க முடியாதவர்களாக இருநதார்கள். இன்று அந்தக் குறையும் நீங்கிவிட்டது. பெற்றோரது பொறுப்புக்களை அரசே பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது.

சிலவேளைகளில் சில பெற்றோரால் மாணவருக்கு நல்ல வசதி வாய்ப்புக்களைச் செய்துகொடுக்க முடியாமல் இருக்கலாம். உதாரணமாக ஒரு பொறியியலாளரின் பிள்ளை பெறும் வசதி வாய்ப்புக்களைச் சாதாரண கூலியாளின் பிள்ளை பெறமுடியாதுதான். எனினும் அந்தக் கூலியாள் தன்னாலான உச்சக்கட்டப் பங்களிப்பைப் பிள்ளைகளுக்குச் செய்கிறார் என்பதை மறுக்க முடியாது. ஒவ்வொரு பாடசாலையிலும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் துவிச்சக்கர வண்டிகளின் தொகையையும் தனியார் நிறுவனங்களில் பணங்கொடுத்துப் படிக்கக் குழுமியிருக்கும் மாணவர் தொகையையும் நோக்கினால், மாணவரின் கல்விக்குப் பெற்றோர் செய்யும் பங்களிப்புப் புலனாகும்.

> *பாடசாலையிலும் சரி, தனியார் நிறுவனங்களிலும் சரி கற்பித்தல் தொழிலைச் செய்பவர் ஆசிரியர். ஆகவே ஆசிரியர்கள் கல்வி உயர்ச்சிக்கு வழிகாட்டுகிறார்களே தவிர, வீழ்ச்சிக்கு வழிகாட்டுவதில்லை.*

கல்வி என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமன்று சமூக விழுமியங்களையும் ஒழுக்கத்தையும் உள்ளடக்கியது. அது,

**ஒழுக்கம் விழுப்பம் தரலால்,**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**

என்றார் வள்ளுவப் பெருந்தகையும். எனவே, தலையங்கத்திலே 'கல்வி வீழ்ச்சி என்று குறிப்பிடுவதில் மாணவரின் ஒழுக்கக் கேடுகளையும், நெறிபிறழ் மனப்பாங்குகளையும் உள்ளடக்கலாம்.

22.01.2004 விவாத அரங்கிலே கட்டுரையாளர் 'கல்வி பல்கலைக் கழக அனுமதிநோக்கி நகருவது ஒரு சாபக்கேடே' என்று குறிப்பிடுவது இக்கருத்துக்கு அனுசரணையாக உள்ளது. இதன்படி எடுத்துக் கொண்டாலும் இந்த வீழ்ச்சிக்குக் காரணம் மாணவர்களே என்பது வெளிப்படை. மாணவர்களின் ஒழுக்கப்பிறழ்வான நடத்தையைப் பெற்றார் தூண்டுவதும் இல்லை ஆசிரியர் முன்னெடுப்பதுவும் இல்லை.

ஒழுக்கம், சமுதாய விழுமியம் இவற்றைப் போதிப்பதில் பாடசாலையும் பெரும்பங்கை வகிக்கின்றது என்பது உண்மையே ஆயினும், அதன் முற்றுமுழுதான பொறுப்பைப் பாடசாலையே ஏற்க முடியாது. ஒரு நாளில் 24 மணிநேரத்தில் ஒரு மாணவன் அதிகபட்சமாக 8 மணித்தியாலங்களையே பாடசாலையில் கழிக்கின்றான். ஏனைய 16மணி நேரமும் அதாவது மூன்றில் இரண்டு பங்கு நேரமும் அவனது பொழுது வீட்டிலும், தெருவிலும் சினிமா, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் பிற வழிகளிலும் செலவாகின்றது. இந்த இடங்களில் ஒழுக்கக்கேடான பழக்கங்கள் உள்வாங்கப்படுகின்றன. இதில் ஒருவனது குடும்பம், நண்பர்கள், ஊடகங்கள் இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன.

கல்வி வீழ்ச்சி என்று கூறும் போது பொதுவாக மாணவரின் அடைவுமட்ட வீழ்ச்சியையே அது குறிக்கின்றது என்றே எல்லோரும் கருதுகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது.

தலைப்பின் அடித்தளமாக அமைவது மாணவரின் கல்வி வீழ்ச்சிக்கு யார் பொறுப்பு என்பதே. மாணவரின் கல்வியில் அவர்களது உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, மூளை விருத்தி என்பனவும் கட்டுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. இந்நிலைகளிலும் ஆசிரியரைக் குறைகூற முடியாது. குடாநாட்டு மாணவரின் கல்வி வீழ்ச்சியைப் பொறுத்தவரை இங்கு அடிக்கடி நிகழ்ந்த இடப்பெயர்வுகள் கண்காணிப்பற்ற தன்மை ஒழுக்கக்கேடான நிலைமைகளைக் கட்டுப்படுத்த சட்டரீதியான அமைப்புக்கள், அன்றிருந்த நிலை என்பனவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நூல் நிலையங்கள் எரிக்கப்பட்டமையும், இடப்பெயர்வுகளில் அவை அழிக்கப்பட்டமையும் கல்வி வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்று சொல்லலாம். இந்த நிலைமைகளிலும் சூழல் மயப்படாது தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கற்கவேண்டிய பொறுப்பும் மாணவருடையதே. இங்கும் ஆசிரியரைக் காரணப் படுத்த முடியாது.

வருடாவருடம் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்குத் தானாகவே திடீரென எங்கிருந்தோ ஞானம் வெளிப்பட்டு அவர்கள் தெரிவாவதில்லை. அவர்களை யாரோ ஆசிரியர்கள் கற்பித்துத்தான் அவர்கள் அந்த நிலைக்கு வருகிறார்கள். பாடசாலையிலும் சரி தனியார் நிறுவனங்களிலும் சரி கற்பித்தல் தொழிலைச் செய்பவன் ஆசிரியன் தானே. ஆக ஆசிரியர்கள் கல்வி உயர்ச்சிக்கு வழிகாட்டுகிறார்களே தவிர வீழ்ச்சிக்கு வழிகாட்டுவதில்லையே.

ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கொள்வோம். அதிலே 10பேர் பல்கலைக் கழக அனுமதி பெறுகிறார்கள். 30பேர் பின்னடைகிறார்கள் என்று கொள்வோம். இங்கே கல்வி வீழ்ச்சிதான். ஆனால், 10 பேரைக் கற்பிக்கும் ஆசிரியர் தானே 30பேரையும் சேர்த்துக் கற்பிக்கிறார். 10பேர் உயர வேண்டும் 30பேர் தாழவேண்டும் என்று ஆசிரியன் வேறுபடுத்திக் கற்பிக்கின்றானா இல்லையே. 10 பேரும் முயன்று கற்கின்றார்கள். ஏனையோர் அலட்சியமாக இருக்கிறார்கள். இந்த நிலையில் ஆசிரியரைக குறைகூற முடியுமா எனவே, மாணவர் கல்வி வீழ்ச்சிக்கு மாணவரே காரணம் என்பது தெளிவு.

அது மட்டுமன்று மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மாணவரே காரணம் என்று ஆங்கிலப் பழமொழியொன்று அறுதியிட்டுச் சொல்கின்றது. **One can lead a horse to water, but fifty Can't make him drink.** ஒரு குதிரையை ஒருவனே நீர்நிலைக்கு வழிகாட்டலாம்; கொண்டு செல்லலாம். ஆனால், 50 பேர் சேர்ந்தாலும் அதனைத் தண்ணீர் குடிக்கச் செய்ய இயலாது. குதிரை தானே நினைத்துத்தான் தண்ணீர் குடிக்க வேண்டும். இதுபோல ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பித்தலைச் செய்யலாமே தவிர கற்றலைச் செய்ய முடியாது. கற்கின்ற பொறுப்பு மாணவரைச் சார்ந்தது. மாணவர்கள் தாமே மனது வைத்துத் தமது கல்வியைக் கற்கவேண்டும். கல்லாமைக்கு ஆசிரியர் உடந்தையானவர் அல்லர்.

எனவே, மாணவரின் கல்வி வீழ்ச்சிக்கு மாணவரே காரணம் என்பது வெளிப்படை. □

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் குறித்து எழுத்து மூல விளக்கம்

(கொழும்பு)

இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கம் எழுத்து மூல விளக கங்களை இந்தியாவுக்கு அளிக்கவுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத தெரிவிக்கையில்,

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இவ் ஒப்பந்தம் தொடர்பான இறுதி நகல் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இருநாட்டின் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் அண்மையில் ஈடுபட்டனர். இந்தியாவில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் பாதுகாப்புத்துறை தொடர்பான விரிவான ஏற்பாடுகளைச் செய்ய திட்டமிடப்பட்டது.

அத்துடன், இலங்கை இராணுவத்தினருக்கு ஆயுதப்பயிற்சியளிக்கவும், விமான, கப்பல் உதவிகளை வழங்கவும் இந்தியா முன் வந்தது.

ஆனால், இவ் ஒப்பந்தம் இம்மாதம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அதனை காலவரையின்றி இருநாட்டுப் பிரதிநிதிகளும் ஒத்திவைத்துள்ளனர்.

இதற்கிடையில் இராணுவத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும், ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன.

இதற்கமைய ரஷ்யா இராணுவ உதவிகளையும், ஆயுதப்பயிற்சிகளையும் இலங்கை இராணுவத்துக்கு வழங்கவுள்ளது.

(தி-61)

## ரயில்வே ஊழியர்கள் சங்கம் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை சீர்குலைக்க தேசிய ரயில்வே ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் முயற்சி மேற்கொள்வதாக, ரயில்வே சொத்துக்களையும் மற்றும் ரயில்வே ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாத்து வரும் சங்கம் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளது.

சங்கத்தின் அமைப்பாளர் இது பற்றி ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் ரயில்வே ஊழியர்கள், ரயில்வே சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாக ரயில்வே ஊழியர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் சிலர் பொலிஸாரிடம் பொய் முறைப்பாடு செய்துள்ளனர்.

தற்போதைய வேலை நிறுத்தம் ரயில்வே ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது.

ரயில்வேயின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் திட்டம் எதுவும் அவர்களுக்கு கிடையாது.

எனவே, ரயில்வே ஊழியர்கள் மீது எவரும் அச்சுறுத்தல் விடுக்கக் கூடாது என்றும் அவர்களை தேவையற்ற வகையில் பொலிஸார் கைது செய்யக் கூடாது எனவும் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிடம் கேட்டுள்ளோம் என்றார்.

(தி-60,10)

# செய்தித் துளிகள்

## அச்சுறுத்தல் விடுக்கும் அலங்கார மீன்கள்

உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் அலங்கார மீன்களை இறக்குமதி செய்ய வேண்டாம் என சுற்றாடல் பாதுகாப்பு நிபுணர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனா.

இத்தகைய உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் 24 வகையான அலங்கார மீனினங்கள் இனங்காணப்பட்டு அவற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(உ-60,10)

## உலக வங்கியின் பொருளாதார நிபுணர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

உலக வங்கியின் தெற்காசியப் பிராந்திய நாடுகளின் பிரதம பொருளாதார நிபுணர் சாந்தா தேவராஜன் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ஹோட்டல் பிளேசில் உள்ள சர்வதேச உறவுகளுக்கான இலங்கைப் பொருளாதார நிலையத்தில் இன்று திங்கட்கி ழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தவுள்ளார்

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தெற்காசியப் பிராந்திய நாடுகளின் பிரதம பொருளாதார நிபுணராக பதவியேற்ற பின் இவர் மேற்கொண்ட முதலாவது பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(தி-61)

## கட்டடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை அருணோதயா சன சமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடம் இன்று திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிலையத் தலைவர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், யு.என்.எச்.சி.ஆர். வெளிக்கள அலுவலகத் தலைவர் கெய்சுகி முறாட்டா சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச)

## தேசிய சபை அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின்பேரில் நாட்டில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்கிலான தேசிய சபையொன்றை அமைப்பதற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களை இன, மத, கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைத்து இச்சபையினூடாக சமாதானம் மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான முக்கிய கூட்டமொன்று அண்மையில் கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(தி-16)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

33

## முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

### யாழ்ப்பாண இராச்சியம்

. யானைகளைப் பிடிப்பதற்கும், பழக்குவதற்கும், பராமரிப்பதற்கும் நெடுங்காலத்து வழமையான ஏற்பாடுகள் இருந்தன. மொத்தக்கர், பணிக்கர், தளையர் என்போர் அவற்றோடு சம்பந்தப்பட்டோர் ஆவார். அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கப்படும் யானைகளுக்கு வேண்டிய தீனைக் கொடுப்பது தனக்காரரின் கடமையாகும். வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு யானைகளைக் கடத்திச் செல்லும் நிலத்தொடர் ஆனையிறவு என்ற பெயரால் வழங்கி வந்தமையும் கவனித்தற்குரியதாகும்.

17ஆம் நூற்றாண்டின் முடிவிலே உலாந்தாக்காரர் அதிகாரிகளுக்கு அடங்காப்பற்று வன்னியர் திறையாகக் கொடுக்கவேண்டிய விபரங்கள் மேல் வருமாறுள்ளன.

| வன்னியனாரின் பெயர் | நிலப்பிரிவு | யானைகள் |
|---|---|---|
| 1.தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் | அ. பனைங்காமம் பற்று | 17 |
| தொம் கஸ்பாறு இலங்கை நாராயணர் | ஆ.பழைய விளாங்குளம் | 2 |
| | இ. புதுக்குடியிருப்பு | 2 |
| 2. தொம் தியோகு புவிநல்ல மாப்பாணர் | அ. கரிக்கட்டு மூலை | 7 |
| | ஆ. மேலபத்து | 5 |
| 3. தொம் அம்பலவாணர் | கருநாவல் பத்து | 4 |
| 4. தொம் சேதுகாவலர் மாப்பாணர் | தென்னமரவாடி | 2 |
| 5. தொம் பெருமையினார் | முள்ளியவளை | $3\frac{1}{2}$ |
| | மொத்தம் | $42\frac{1}{2}$ |

யானை வேட்டைத்தளங்கள், யானைப் பந்திகள் ஆகியவற்றை நன்நிலையில் வைத்திருப்பதில் உலாந்தாக்கார அதிகாரிகள் அதிக கவனஞ் செலுத்தினார்கள். அரசாங்கத்துக்கு ஒப்படைக்கப்படும் யானைகள் பன்னிரண்டு நாட்களுக்கு யானைப்பந்தியிலே கட்டிவைக்கப்படும். அதற்குள் அவற்றுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கெல்லாம் ஒப்படைத்தவர்களே பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டனர். அதற்குப் பின்பு யானை உயிரோடிருந்து சௌக்கியமானதாகக் காணப்படுமிடத்து, அதனை அதிகாரிகள் கொம்பஞ்ஞீயவின் சார்பில் ஒப்புக்கொள்வர். யானையின் உயரத்தை அளந்து கொண்டு அதன் முதுகிலே கொம்பஞ்ஞீயவின் இலச்சினை இடப்படும். யானைகள் விற்கப்பட்டபின் மீண்டுமொரு முறை அவற்றுக்கு இலச்சினை இடப்படும். கொன்செல்யவின் அங்கத்தவர்கள் அனைவரதும் முன்னிலையில் யானைகள் விற்கப்படும். 17ஆம் நூற்றாண்டின் 8வது தசாப்தத்திலே ஒராமி, உலௌரி, பிர்மால் திம்மரசர் என்னும் நாயக்கர்களே யானைகளைக் கொள்ளவனவு செய்த பிரதானமான வணிகராவர். அவர்கள் 100, 000 பணம் பெறுமதியான யானைகளை 1669இற் கொள்வனவு செய்தனர்.

### முத்துக்குளிப்பு

முற்காலங்களிலே பாண்டி நாட்டுக் கரையோரத்திலும் மன்னார்க்கடலிலும் பெருமளவிளே முத்துச் சிப்பிகள் விளைந்தன. அழகுசாதனம் என்ற வகையில் முத்துக்களைப் பலரும் விரும்பினார்கள். செல்வம் படைத்த சமுதாயங்களில் உள்ள பெண்கள் முத்திழைத்த ஆபரணங்களில் அதிக பிரியங் கொண்டிருந்தார்கள். முத்துக்கள் அருமையாகக் கிடைத்தமையால் அவை பெறுமதி மிக்கனவாய் இருந்தன. பண்டைக்காலம் முதலாகச் சர்வதேச வாணிபத்தில் முத்துக்கள் ஒரு பிரதானமான இடத்தைப் பெற்றிருந்தன. புராதன இந்திய இலக்கியங்கள் பலவற்றிலே முத்துக்கள் அரும் பொருளாகவும் மங்கலப்பொருளாகவும் வர்ணிக்கப்படுகின்றன. முத்துச் சலாபத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு மன்னர்களிற் பலர் கவனம் செலுத்தினார்கள்.

மன்னார்க் கடலில் நடைபெற்ற முத்துக்குளிப்பின் மூலம் 14 ஆம் நூற்றாண்டிலே ஆரியச் சக்கரவர்த்தி மிகுந்த வருமானத்தைப் பெற்றான். 13 ஆம், 14 ஆம் நூற்றாண்டுகளில் முத்துக்கள் மிகப் பேரளவிலே உற்பத்தியாகியிருந்தன. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்த ஜோர் தனஸ் என்னும் வெனீசியப் பாதிரியார் 8,000 படகுகள் மன்னார்க்கடலில் முத்துக்குளிப்பில் ஈடுபட்டிருந்தாகக் குறிப்பிடுகின்றார். இவுன் பத்துத்தா இலங்கைக்குப் போன சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தி முத்துச் சலாபத்திற்குச் சமீபமாகப் பாளையமிட்டிருந்தான். அவன் முத்துக்குளிப்பை நடாத்துவதில் ஈடுபட்டிருந்தான். அங்கு கடலிற் கிடைத்த முத்துச் சிப்பிகளைச் சிலர் வெய்யிலிற் காயப்போட்டார்கள். வேறு சிலர் சிப்பிகளிலிருந்து பொறுக்கிய முத்துக்களை அவற்றின் தரத்திற்கேற்ப வகைப்படுத்திய வண்ணமாய் இருந்தனர். ஆரியச்சக்கரவர்த்தி இவுன் பத்துத்தாவிடம் சில முத்துக்களைக் காட்டி அவற்றின் தாற்பரியங்களைப் பற்றி விபரித்தான்.

14ஆம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்திகள் முத்துக்குளிப்பை ஏகபோகமாக்கித் தாமாகவே நடத்தி வந்தனர். முத்துக்குளிப்பு சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் நடைபெற்றது. அது நடைபெறும் நிலையங்களிற் படைகளை நிறுத்திக் காவல் புரிய வேண்டிய தேவை காணப்பட்டது. அரசனது அதிகாரிகளின் கண்காணிப்பில் முத்துக்குளிப்பு நடைபெறுவதற்கு முன் பல சிறிய கட்டடங்களும் குடிசைகளும் அமைக்கப்படும். இம் மாதங்களில் முத்துக் குளிப்போர் பொருந்தொகையானோரும், அதனைக் கண்காணிப்போரும் வியாபாரிகளும் அங்கு சென்று கூடுவர். எனவே குடிநீர் வசதிக்காக மாதோட்டத்தில் உள்ள குளங்களைச் சுத்தம் பண்ணிப் பேணிக்கொள்ளவேண்டும். மேலும் அரிசி,வெண்ணெய், எண்ணெய் போன்ற உணவுப்பொருட்களை அங்கு தேவைக்கேற்ற அளவுகளிற் சேகரிக்க வேண்டும். (தொடரும்)



கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களைப் படத்தில் காணலாம்.
(படம் :- என்.புலேந்திரன்)




யாழ். சதுரங்கச் சம்மேளனத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் அனைத்து சுற்றிலும் வெற்றி பெற்ற வீ.ரி.எஸ்.வித்தியாதரனுக்கு, சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் என்.ஞானக்குமரன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகிறார்.



யாழ். மாநகர மேயர் எஸ்.எஸ்.நவரத்தினம் ஞாபகார்த்தமாக, அவரது குடும்பத்தினரால் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கென அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அப்பொருட்களை வித்தியாசாலை அதிபர் மாணவி ஒருவருக்கு கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## நுகர்வோர் நலன் பேணும்

# விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவை நிதித்துறை உருவாக்கியுள்ளது

(கிளிநொச்சி)

நுகர்வோரின் நலனைப் பேணுவதற்காக தமிழீழ நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவை உருவாக்கியுள்ளது.

பொருட்களின் விலை உயர்வினால் நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் இப்பிரிவு செயற்படவுள்ளது.

ஆயத்தீர்வையைக் காரணம் காட்டி வியாபாரிகளால் பொருட்கள் அதிகவிலையில் விற்கப்படுவதால் நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர். நுகர்வோரின் நலன் கருதி தீர்வை விலக்களிக்கப்பட்ட பொருட்களையும் அதிக விலையில் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்.

இதனைத் தடுக்கும் வகையிலேயே விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என தமிழீழ நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வியாபார நிலையங்களில் விற்கப்படும் பொருட்களின் விலை தொடர்பான விபரங்களை நுகர்வோர் இலகுவாக அறிந்துகொள்ளும் வகையில் விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமெனவும் விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பான பொருட்களின் விபரம் தமிழீழ நிதித்துறையினால் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு

# வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினமான எதிர்வரும் 4ஆம் திகதி அன்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளவிருக்கும் தென்மராட்சி தெற்கு மக்களுக்கும் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கும் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஒன்றியப் பொதுச் செயலாளர் இதுதொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,

போரினால் பாதிககப்பட்டு புலம்பெயர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவல வாழ்வை அனுபவித்துவரும் தென்மராட்சி தெற்கு பிரிவுகளான மறவன்புலவு, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, நாவற்குழி தெற்கு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு படைத்தரப்பினர் மறுத்து வருகிறார்கள். இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

அப்பகுதியில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளப்படையினர் பல வழிகளிலும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர் என அப்பகுதி வாழ் மக்கள் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர்.

அதனால் ஏமாற்றமும், விரக்தியுமடைந்த பொதுமக்கள் தமது எதிர்ப்புணர்வைக் காட்டி தங்களது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர். இதற்கு சகல வழிகளிலும் முழு ஆதரவு வழங்க யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை, வலி.வடக்கு மக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை எதிர்வரும் 4ஆம் திகதியான சுதந்திர தினத்தன்று தொடங்குகின்றனர்.

இவற்றிற்கு அனைத்துப் பொது அமைப்புகளும், பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# பறவைக் காய்ச்சல் நோய் தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் "பறவைக்காய்ச்சல் நோய் பரவாமல் தடுப்பதற்கான முன் நடவடிக்கைகளில் அனைவரும ஈடுபடவேண்டும். அத்துடன் அதனைக் கட்டுப்படுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண பங்களிபபை வழங்கவேண்டும் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கேட்டுள்ளது.

திணைககளத்தின் பணிப்பாளர் ஏ.பி.ஆர்.அமரசேகர இதுபற்றித் தெரிவிக்கையில்,

ஆசிய நாடுகளில் வேகமாகப பரவிவரும் இந் நோயினால் இலங்கையில் கோழிவளர்ப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கோடிக்கணக்கான ரூபாவை வருமானமாகப் பெற்றுத்தரும் உள்ளூர் கோழிவளர்ப்பு, இலங்கையின் தேசிய பொளாதாரத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கி வந்தது.

இந்நிலையில் பறவைக்காய்ச்சல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதால் கோழி வளர்ப்போர் மத்தியில அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இலங்கையில் உள்ள சகல துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந் நடவடிக்கைகள் மூலம் மட்டும் நோய் பரவாமல் இருக்கும் என உறுதியாகக் கூறமுடியாது. எனவே, கோழிவளர்ப்போர் மற்றும் வர்த்தகர்கள் இதுவிடயத்தில் மிகக் கவனமாக இருக்கவேண்டும் என்றார்.

இதேவேளை, பறவைக்காய்ச்சல் நோய் தொற்றுக்குள்ளாகி இருக்கும் ஆசிய நாடுகளிடம் இருந்து கோழிகளை இறக்குமதி செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

# கள்ளக் "கரண்ட்" எடுத்த எட்டுப் பேர் உயிரிழப்பு

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் அண்மைக காலமாக சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதுடன், கடந்த ஆண்டு இவ்வாறான சம்பவங்களினால் 8பேர் உயிரிழந்துள்ளதாகவும் அண்மையில் திரட்டிய புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் பரவலாக அதிகரித்துள்ள இச் சட்டவிரோத மின்பாவனைக்கான மின் இணைப்புக்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளுக்கு பொலிஸாரும், மின்சார சபையினரும் தண்டணை வழங்கி வரும் நிலையிலும், நாளாந்தம் சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான சட்டவிரோத மின் இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் பல இலட்சம் ரூபா வரையில் தமக்கு நட்டம் ஏற்படுவதாகவும் மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மின் இணைப்புப் பெறுவதற்காக உரிய முறையில் மின்சாரசபை அலுவலகங்களில் விண்ணப்பித்தாலும், இது விடயம் தொடாபாக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-43)

## பிரியாவிடை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இதுவரை காலமும் சேவையாற்றி, வேறிடங்களுக்கு மாற்றலாகிச் சென்ற 8 ஊழியர்களின் பிரியாவிடை வைபவம் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11.00மணிக்கு பணிமனைக் கேட்போர் கூடத்தில் உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில நடைபெறவுள்ளது. (35)

# டெனிஸ் இறுதிப் போட்டியில் விளையாட பெடருக்குத் தகுதி

அவுஸ்திரேலியவின் மெல்போன் நகரில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் சுற்றுப் போட்டிகளின் ஆடவர் பிரிவின் இறுதிப் போட்டியில் விளையாட நடப்பு விம்பிள்டன் சம்பியனான ரோஜர் பெடரர் தகுதி பெற்றுள்ளார்.


சுவிஸ்லாந்து நாட்டு வீரரான ரோஜர் பெடரர் அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் விளையாட முதன் முதலாகத் தகுதி பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயின் வீரரான யுவான் ஹா்லஸ் பெரேராவுடனான அரையிறுதிப் போட்டியின் போது 6:4, 6:1,6:4 என்ற 3நேர் செற்களில் வெற்றிகொண்டு ரேராயர் பெடரர் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார். இதன்படி இறுதிப் போட்டிக்கு ஏற்கனவே தகுதிபெற்றுள்ள ரஷ்ய வீரரான மரட்ஸ் ஸப்பியை எதிர்த்து இவர் விளையாடவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இச் சுற்றுப போட்டியின் கலப்பு இரட்டையர் இறுதி ஆட்டத்தில் விளையாட இந்திய வீரரான லியண்டபோஸ்சும், அமெரிக்க வீராங்கனையாக மாட்டினா நவரெத்தின லோவா ஜோடியினரும் தகுதிபெற்றுள்ளனர். இவ்விருவரும் இணைந்து அரையிறுதிப் போட்டியில் ஜொணதன் எல்றிச் மற்றும் லிச்சல் கியூபர் ஆகிய ஜோடியினரை 6:4,6:4 ஆகிய இரண்டு நேர் செற்களில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் ஆடவரிற்கான இரட்டையர் இறுதிப்போட்டியில் நடப்புச் சம்பியன்களான மைக்கல் றொட்றா ஹெப்ரி சஞ்சாரோ ஆகிய பிரான்ஸ் நாட்டு ஜோடிகள், அமெரிக்க இரட்டைச் சகோதரர்களான பொப்பிறைண் மற்றும் மைக்ரன் ஜோடியினரை 7:6,6:3என்ற நோ செற்களில் தோற்கடித்ததன் மூலம் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக்கொண்டுள்ளனர். (தி-68)

# விளையாட்டுச் செய்திகள்



மெல்போர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னீஸ் போட்டியில் மகளிர் ஒற்யைர் சம்பியன் பட்டத்தை பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் வென்றார். இறுதி ஆட்டத்தில் கிம்கிளீஸ்டர்ஸை 6:3, 4:6, 6:3 என்ற செற்களில் ஹெனின் வீழ்த்தினார். பட்டம் வென்ற மகிழ்ச்சியில் வெற்றிக் கோப்பையுடன் ஹெனின் மற்றும் கிளீஸ்டர்ஸ்.

# கோப்பாய் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 3ஆம் சுற்று வலைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்திலும், கரபந்தாட்டப் போட்டி பி.ப.1.00மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

அதற்கு அமைய வலைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு:

### 15 வயதுப் பிரிவு

யா/அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை எதிர் யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்.

யா/கோப்பாய் மகாவித்தியாலயம் எதிர் யா/சோமஸ்கந்தாக் கல்லூரி.

### 17 வயதுப் பிரிவு

யா/கோப்பாய் மகாவித்தியாலயம் எதிர் யா/அச்சுவேலி மத்தியகல்லூரி.

யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி எதிர் யா/அத்தியார் இந்துக்கல்லூரி.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்.

### 19 வயதுப் பிரிவு

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல் கல்லூரி எதிர் யா/புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி.

யா/அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு:

### 15 வயதுப் பிரிவு

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் எதிர் யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

யா/அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலம்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

### 17 வயதுப் பிரிவு

யா/அச்சுவேலி மத்தியகல்லூரி எதிர் யா/அத்தியார் இந்துக்கல்லூரி.

### 19 வயதுப் பிரிவு

யா/சோமஸ்கந்தாக்கல்லூரி எதிர் அச்சுவேலி மத்திய கல்லூரி.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் யா/இடைக்காடு மகாவித்தியாலயம். (தி-79)

## ஒலிம்பிக் கால்பந்தாட்டத்துக்கு

# அவுஸ்திரேலிய அணி தெரிவு

எதென்சில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளில் கால்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒசானிய வலயத்தில் இருந்து அவுஸ்திரேலிய அணி தகுதிபெற்றுள்ளது.

23 வயதிற்குட்பட்டவர்களுககு இடையிலான ஒலிம்பிக் போட்டிகளில் நடாத்தப்படும் கால்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கான தகுதிகாண் போட்டியில் நியூசிலாந்து அணியை 3:1என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெறறுள்ளமையினை அடுத்தே அவுஸ்திரேலிய அணி இந்தத் தகுதியைப் பெற்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையிலும் ஒக்லண்டில் நடைபெற்ற முதலாவது சுற்றுப்போட்டியில் 1:1 என்ற கோல்கள் எண்ணிக்கையில் போட்டி சமநிலையில் முடிவடைந்த போதிலும், 2ஆவதாக இவ்விரு அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்ற போட்டியின் போது 2:0என்ற கோல்கணகில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்தே அவுஸ்திரேலிய அணி இந்த தகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-61)

## விளையாட்டு போட்டி

(கோப்பாய்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30மணிகது அதிபர் இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும், கோப்பாய்க்கோட்ட கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-69)

# கூட்டணியில் போட்டியிட காங்கிரஸுக்கு பத்துத் தொகுதி

(புதுடில்லி)

தமிழ் நாட்டில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 10தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த தி.மு.க தலைவர் மு.கருணாநிதி, காங்கிரஸ் போட்டியிடும் 7தொகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன என்றும் எஞ்சிய 3 தொகுதிகளும் எவை என்பது பற்றி பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்றும் கூறினார்.

மாக்ஸிஸக் கம்யூனிஸ்ட் கட்சி சி.பி.ஐ.யும் இரண்டு தொகுதிகளிலும், ம.தி.மு.க 4 தொகுதிகளிலும் போட்டியிடும் என்றும் கருணாநிதி அறிவித்தார்.

தொகுதி ஒதுக்கீடு பற்றி அவர் அறிவித்த போது காங்கிரஸ் தலைவர்கள் எவரும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


சி.பி.ஐ நீங்கலாக எல்லாக் கூட்டணிக்கட்சிகளுடனும் தொகுதிப் பங்கீடு பற்றி தி.மு.க. இறுதி முடிவு எடுத்துவிட்டது.

இதனிடையே உத்தரப்பிரதேச அரசியலில் ஒரு திருப்பமாக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்று முன்தினம் ப.ஃஜன் சமாஜக் கட்சித்தலைவி மாயாவதியைச் சந்தித்துப்பேசினார்.

இச் சந்திப்பின் போது மாநில அளவில் தேர்தல் உடன்பாடு பற்றி இருவரும் பேசியதாக தெரிகிறது.

இருவரும் பேசியபோது உடன் இருந்த மூத்த காங்கிரஸ் தலைவர் சல்மான் ஹுர்ஸீத் வேறு சில மாநிலங்களிலும் காங்கிரஸ் ஸும் ப.ஃஜன் சமயக் கட்சியும் சேர்ந்து போட்டியிடும் வாய்ப்புக்கள் பற்றி விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

செல்வி மாயாவதியை காங்கிரஸ் தலைவர் சந்தித்திருப்பது இது இரண்டாவது தடவையாகும். (தி-9)



சவூதியரேபியாவில் உள்ள மெக்காவின் மதனா நகரில் இந்த ஆண்டு ஹஜ் யாத்திரைக்காக பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கூடியுள்ளனர் தொடர்ந்து 3 நாட்கள் ஹஜ் யாததிரை மெக்காவில் நடைபெறவுள்ளது.



நேபாள இளவரசர் ஷாதேவ் மற் றும் இளவரசி ஹிமானி ராஜலக்ஷ்மி தேவ் சென்னை வந்தனர். அவர்களை விமான நிலையதத்தில் தமிழக சட்ட மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் டி. ஜெயக்குமார் வரவேற்கிறார்.

## குவைத் பாதுகாப்பு மாநாட்டில் ஷெபாரி கலந்து கொள்கிறார்

(குவைத்)

குவைத்தில் இடம்பெறவுள்ள பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதாக ஈராக் வெளி விவகார அமைச்சர் ஹொஸ்யார் ஷெபாரி அறிவித்துள்ளார்.

இந்தமாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் மூலம் ஈராக்கிற்கும் குவைத்துக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடனும் புதிய நட்பை உருவாக்க முடியுமெனவும் நம்பப்படுகிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் சிரியாவில் இடம்பெற்ற இவ்வகையான பாதுகாப்பு மாநாட்டில் ஈராக் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி-9)

## வடகொரிய அணுவாயுதம் குறித்து மாத இறுதியில் பேச்சுவார்த்தை

(வாஷிங்டன்)

வடகொரிய அணுவாயுதப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் 6நாடுகள் பங்குபற்றும் பேச்சுவார்த்தை ஒன்று இம் மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக அமெரிகக துணை வெளிவிவகார அமைசசர் ஜேம்ஸ்ரெல் தெரிவித்துள்ளார்.

சியோல் நகர் சர்வதேச விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட 6 நாடுகளும் விரைவில் ஆரம்பிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த சுறறுப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்று சீனாவும் ரஷ்யாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

அணுவாயுத விவகாரத்துக்கு தீர்வு காணும் வகையில் முதல் நடவடிக்கையாக சகலவித அணுவாயுத நடவடிக்கைகளும் நிறுத்தபபடும் என்று வடகொரியா சென்ற மாதம் அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது.

இதற்கிடையில் வாஷிங்டன் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததும வடகொரியாவில் உள்ள சகலவித அணுசக்தி நிலையங்களையும் அந்த நாடு செயலிழக்கச் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (தி-9)

## அமெரிக்காவுக்கான பிரி. விமானசேவை இரத்து

(லண்டன்)

பிரிட்டிஷ், பிரான்ஸ் விமானங்கள் அமெரிக்காவுக்கான தமது 7 விமான சேவைகளை நேற்று முன்தினம் முதல் இடைநிறுத்தியுள்ளன.

விமானங்களைத் தாக்குவதற்கு அல்-கெய்டா இயக்கம் திட்டம் தீட்டியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்ததை அடுத்து இந்த விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

ஐரோப்பாவில் இருந்து அமெரிக்கா நோக்கிச் செல்லும் சில விமானங்களை ஒஸாமா பின்லேடனின் அல்-கெய்டா இயக்கம் இலக்கு வைக்கக் கூடுமென தங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

இதேவேளை, இந்த எச்சரிக்கையை அடுத்து, நேற்று நடைபெற வருந்த அமெரிக்காவிற்கான மேலும சில விமான சேவைகளையும் இடைநிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(தி-9)

## ஹூட்டனின் அறிக்கை எரிப்பு

(லண்டன்)

நீதிபதி ஹுட்டன் பிரபுவின் 740 பகக அறிக்கையின் பிரதியொன்றை பிரிட்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் அலுவலகத்திற்கு வெளியே நேற்று முன்தினம் கூடிய சுமார் 200பேர் இந்தப் பிரதியைத் தீயிட்டுக் கொளுத்தி தமது ஆதரவை பிரதமருக்கு தெரிவித்துள்ளனர். (தி-9)

## அ.தி.மு.க ஆலோசனை

(புதுடில்லி)

நாடாளுமன்றத் தேர்தல் பங்கீடு தொடர்பாக அ.தி.மு.க மற்றும் பாரதிய ஜனதாக்கட்சியின் தேர்தல் குழுக்கள் நேற்றுமுன்தினம் சந்தித்து ஆலோசனை நடாத்தியுள்ளன.

பொதுப் பணித்துறை அமைச்சர் மு.பன்னீர்ச்செல்வன் தலைமையிலான அ.தி.மு.க தேர்தல் குழுவும், சி.பி. ராதாக்கிருஸ்ணன் தலைமையிலான பாரதிய ஜனதாக்கட்சியின் தேர்தல் குழுவும் சென்னை அ.தி. மு.க தலைமை அலுவலகத்தில் சந்தித்து இப் பேச்சுவார்தததையை நடாத்தியுள்ளன. (தி-9)

## இஸ்ரேலின் சுவரமைப்பு நீதிமன்றத்தீர்ப்பிற்கு முன்னர் பல்வேறு நாடுகள் எதிர்ப்பு

( ஜெருசலேம்)

மேற்குக் கரையில் இஸ்ரேல் நிர்மாணித்துவரும் மதில்கள் சட்டபூர்வமானதா? என்பதை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு முன்னர் பல்வேறு நாடுகளிடம் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பான எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கும் உரிமை சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றத்துக்கு இல்லையென கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் தெரிவித்துள்ளமைக்கு 29 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளே இஸ்ரேலுககு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளன.

இநத நாடுகள் தமது எதிர்ப்பை சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில் எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளன. (தி-9)

## பாக்.அணுவிஞ்ஞானி அப்துல் பதவி நீக்கம

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் அணுவிஞ்ஞானி அப்துல் காதர்ஹான பிரதமரின் ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அணுத்தந்தையெனக்கருதப்படும் இவர் அணு தொடர்பான தகவல்களை ஈரானுக்கும் லிபியாவுக்கும் வழங்கியதன் காரணமாகவே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாா.

கடந்த பலவருடங்களாக இவர் அதிகாரிகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தானின் அணுவிஞ்ஞானியான ஹான் வடகொரியாவிற்கும் அணு தொடர்பான தகவல்களையும் வழங்கியிருக்கலாம என மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. (தி-9)

## கூட்டு ஒப்பந்தத்தில் பிரி.இந்தியா கையெழுத்து

(புதுடில்லி)

சட்டபூர்வமற்ற முறையில் குடியேறுபவர்களை பரிமாறிக்கொள்வதற்கும், புலனாய்வுத்தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வழிசெய்யும் வகையிலான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும் பிரிட்டனும் இரு தினங்களுக்கு முன் கையெழுத்திட்டிருக்கின்றன.

குடியேற்ற விதிகளை மீறும் இந்தியர்களைத் திருப்பி அனுப்பும் ஒப்பந்தம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தில் துணைப் பிரதமர் அத்வானியும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிற் பிளங்ஹிற்றும் கையெழுத்திட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய உள்துறைத் துணை அமைசசர் ஐ.டி.சாமி, உள்துறைச் செயலாளர் என்.கோபாலசாமி, வெளி விவகாரத் துறைச் செயலாளர் சஷாங ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தீவிரவாதிகள், தீவிரவாத அமைப்புக்கள் குறித்த தகவல்களை 2 நாடுகளுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளவும் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)



மகாத்மா காந்தியின் 57ஆவது நினைவு தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னை மெரீனாவில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய ஆளுநர் பி.எஸ். ராமமோகன் ராவ் மற் றும் தமிழக அமைச்சர்கள்.

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. .
-குறள்

வலம்புரி

# தேர்தலுக்குத் தயாராகும் அரசியல்வாதிகள்

பாராளுமன்ற கலைப்பு குழந்தை பிரசவம் போல் எதிர்பார்க்கப்பட்ட வண்ணமே இருக்கிறது. அதாவது நிறைமாதக் கர்ப்பிணித்தாய் இன்றா நாளையா குழந்தையைப்பெற்றெடுப்பாள் என்பது போல இலங்கைப் பாராளுமன்றக் கலைப்பை எதிர் பார்த்தபடியே-அரசியல்வாதிகள் துயிலின்றி துன்பப் படுகிறார்கள்.

பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என ஜனாதிபதி கூறிக்கொண்டாலும் அதனை நம்புவதற்கு அரசியல்வாதிகள் தயாரில்லை.

ஏனெனில் அவ்வாறு நம்பும் அளவிற்கு ஜனாதிபதி நடந்துகொண்டதும் இல்லை.

ஐக்கியதேசிய முன்னணி அரசின் கீழ் இருந்த மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்டமை ஜே.வி.பியினரின் அழுத்தம் காரணமாகவே என இப்பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

நாட்டை பாதுகாப்பதற்காகவே மூன்று முக்கிய அமைச்சுக்களை பொறுப்பேற்றுக் கொண்டதாக ஜனாதிபதி கூறினாலும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச நாடுதிரும்புவதற்கான ஏற்பாடாகவே ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக் கொண்டதனால் -ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி. பி.கூட்டு சாத்தியமானது.

இருகட்சிகளின் கூட்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கானதல்ல. மாறாக சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசை பதவி கவிழ்ப்பதற்கேயாகும்.

எனவே இரு கட்சிகளும் கூட்டு சேர்ந்ததின் நோக்கம் நிறைவேற வேண்டுமாயிருந்தால் பாராளுமன்றத்தைக் கலைத்தே ஆகவேண்டும். இல்லையேல் கூட்டுச்சேர்ந்ததின் பயன் எதுவும் இல்லாமல் போகும் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி.பியின் நிலைப்பாடாகும்.

இதனால் பாராளுமன்றக் கலைப்பை ஜனாதிபதி எந்நேரமும் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றைக் நடத்துவதை மையமாக வைத்து இலங்கை-இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தமும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை-இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் தேர்தல் முடிபுகளில் பாதகமானதாக அமையலாம் என்பதால் அதனை ஏற்படுத்துவதில் இருந்து உரியவர்கள் விலகி நிற்க விரும்புகிறார்கள்.

ஆக பாராளுமன்றக் கலைப்பையும் பொதுத் தேர்தலையும் எதிர்பார்த்த வண்ணம் மூவின அரசியல் கட்சிகளும் காத்திருக்கின்றன.

நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று வருமாக இருந்தால், அஃது சமாதான முயற்சிகளைப் பெரிதாகப் பாதிக்கும் என்பதுடன் மிகப்பெரியதொரு வன்முறைச் சம்பவங்களும் ஏற்பட வாய்ப்பாகும்.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்திருப்பதால் தென்னிலங்கையில் நடைபெறும் தேர்தலின் முடிபுகளும், அதன் விளைவுகளும் வித்தியாசமானவையாக - ஆபத்து நிறைந்ததாக இருக்கும்.

ஜனாதிபதியின் கையில் பாதுகாப்பு அமைச்சு இருக்கின்றபோது அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்த ஜே.வி.பி தவறப்போவதில்லை. இதனால் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கும்.

குத்துவெட்டுக்கள், கள்ளவாக்குகள், மோசடிகள் மலிந்து ஜனநாயகமே கேள்விக் குறியாகும் அளவில் நடைபெறப்போகும் தேர்தல் இந்த நாட்டிற்கு விடிவைத் தராமல் இருளையே வழங்கப்போவது உறுதியாகிவிட்டது.

அதற்கான ஏற்பாடுகளும் தென்னிலங்கையில் பூர்த்தியாகிவிட்டன.

# கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தொலைந்த அ.அட்டைகளைப் பெறலாம்

(தம்பசிட்டி)

பல்வேறு இடங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்ட ஒருதொகுதி தேசிய அடையாள அட்டைகள், தொழில் அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள், விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட நிரந்தர அடையாள அட்டைகள் ஆகியன கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றப்பிரிவுக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.சேனாவீர கேட்டுள்ளார்.

அவற்றின் விபரம் வருமாறு:-

**தேசிய அடையாள அட்டை**

ஆறுமுகம் மணிவண்ணன் - பாரதி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

முத்தையா சிவகுமார் - நீர்ப்பாசன வீதி, கண்ணகைபுரம், கிளிநொச்சி.

வல்லிபுரம் வேலானந்தன் - பாலிநகர், வவுனிக்குளம்.

காளிமுத்து செல்லத்துரை - முடக்காடு, நெல்லியடி, கரவெட்டி.

சுந்தரம் செல்லம்மா - புங்குடுதீவு மேற்கு.

துரைராசா சுந்தரசபேசன் - அளவெட்டி தெற்கு.

வரதராசா சிவபாக்கியம் - கண்டி வீதி, எழுதுமட்டுவாள் தெற்கு.

கணபதிப்பிள்ளை வடிவேலு - 4ம் கட்டை, மன்னார் வீதி, பூநகரி.

சண்முகம் கருணாகரன் - சாந்திபுரம், மட்டுவில் வடக்கு.

ஏரம்பு இராசலட்சுமி - உடையார் கட்டு, புதுக்குடியிருப்பு.

இராசகுலசூரியர் கமலாவதி - 991, மடத்தடிவீதி, மானிப்பாய்.

சுந்தரம் நாகேந்திரன் - அக்கராயன் குளம், ℧, கிளிநொச்சி.

தம்பிராசா வசந்தா - தொல்புரம், சுழிபுரம்.

இலட்சுமி விசுவன் - கோகிலாக்கண்டி, தென்மராட்சி.

தர்மரட்ணம் வரதன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி.

உத்தமி ஆறுமுகம் - கண்டாவளை, கிளிநொச்சி.

முகமட் கசீரின் - முகமட் பாரீஸ் - 2/2/1, குளமடி நாவலப்பிட்டி.

கதிரவேலு சரஸ்வதி - கோவில் வீதி, நல்லூர்.

இராசநாயகம் விக்னராஜா - நெசவுநிலைய ஒழுங்கை, மானிப்பாய்.

சற்குணம் கனகசபை - செருக்கக்குளம், சுழிபுரம்.

நடராசா சிவாஜினி - தண்ணீர் ஊற்று மேற்கு, முள்ளியவளை.

இராசையா ரவி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

கனகரட்ணம் செல்வதீபன் - பலாலி கிழக்கு, வயாவிளான்.

நகுலாம்பிகை தம்பு - இல.363பி, முள்ளியவளை.

இராசஇலட்சுமி தர்மரத்தினம் - இல. 237, ஞானிமடம், செட்டியகுறிச்சி.

ஆறுமுகம் சிவபாஸ்மகேந்திரன் - ஆழியவளை, மருதங்கேணி.

நடராசா பராசக்தி - இல. 5, மாணிக்கவாசகர் வீதி, திருமலை.

வீரன் கந்தையா - சரசாலை, தென்மராட்சி.

முத்துசாமி பெரியதம்பி - அராலி வடக்கு.

சுப்பிரமணியம் சின்னத்தம்பி - திருமலைஆறு கிளிநொச்சி.

பொன்னையா சிவராசா - எழுதுமட்டுவாள்.

வேலு வள்ளியம்மா - 122பி, வலுத்தாப்பிட்டி, மல்வத்த, நாவலப்பிட்டி.

பாலகிருஸ்ணன் கிருஷ்ணராஜ் - இல. 375பி, கணேஸ்வரம்.

**தொழில் அடையாள அட்டை**

தம்பு நகுலாம்பிகை - புகையிரதநிலைய வீதி, வவுனியா.

யோசப் மார்சன் - பசார் வீதி, மன்னார்.

மரியசிலீன் தம்பித்துரை - 18ஏ, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

செல்லையா கதிர்காமநாதன் - இலங்கைவங்கிவீதி, வவுனியா.

ஆர். ரசித்தா - வவுனியா இலங்கைத் திருச்சபை, தமிழ்க்கலவன் பாடசாலை.

**இராணுவ அடையாள அட்டை**

வேலுப்பிள்ளை வேலானந்தன் - இடைக்குறிச்சி கிழக்கு, வரணி.

தங்கராசா கஜேந்திரன் - மாகியப்பிட்டி சண்டிலிப்பாய்.

புஸ்பராசா ஜெனிற்றா - புளியங்கன்னி, கரணவாய் தெற்கு.

செல்வராசா சரஸ்வதி - 1ம் வட்டாரம், நயினாதீவு.

சண்முகலிங்கம் நிசாந்தன் - இல. 21 தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி.

ஆரோக்கியநாதன் பிரான்சிக்கா - 6ம் வட்டாரம், நெடுந்தீவு.

ஞானசேகரம் வாசுகி - வத்திராயன் தெற்கு, தாளையடி.

கோபாலசாமி மேரி - செம்மணி வீதி, நல்லூர்.

இராசையா கஜேந்திரன் - மாவைகலட்டி, கொல்லன் கலட்டி, தெல்லிப்பழை.

இரத்தினம் திபேஸ்கரன் - தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு.

முத்துசாமி பெரியதம்பி - நாகேந்திரமடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

சோதிலிங்கம் விமலேஸ்வரன் - இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

தர்மலிங்கம் தங்கராசா - சங்கத்தாராய் வயல், இயக்கச்சி.

சிவஞானம் சுசிலாதேவி - கல்லுவம் கரணவாய்மேற்கு.

முத்தையா நடராசா - அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு.

சின்னாச்சிப்பிள்ளை சுப்பிரமணியம் - மல்லாகம்வீதி, கட்டுவன்.

மகாதேவா விஜயமோகன் - மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

பவளராசா நதியா - பிள்ளையார் கோவிலடி, மூளாய்.

திருமால் கயல்விழி - கிராமசபை ஒழுங்கை கச்சாய் வீதி, கொடிகாமம்.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் நிரந்தர அ.அட்டை**

செல்லத்துரை விஜயகுமார் - வத்திராயன் வடக்கு, தாளையடி.

வேலாயுதபிள்ளை இந்திராதேவி - வத்திராயன் வடக்கு, தாளையடி.

பொன்னையா பாலகணேசமூர்த்தி - இல. 310, 3ம் யூனிற், பாரதி நகர், யோகபுரம், மல்லாவி. (தி-45)

# அரசின் தீர்வுத் திட்டத்தை ரயில்வே ஊழியர் நிராகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வினை ரயில்வே தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.

ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற போது, அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட இந்தத் தீர்வுத்திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதென இக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மாணவர்கள், அரச,அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் உட்பட பயணிகளும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.(தி-61)

ௐ தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். பலவீனத்திற்கான பரிகாரம் ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.

மிகப் பெரிய உண்மை இது. வலிமை தான் வாழ்வு. பலவீனமே மரணம்.

சுவாமி விவேகானந்தர்

# இராணுவ வீரர் கைது

(கொழும்பு)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையாற்றிவந்த லெப்டினன் தரத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக்கூறப்படும் இந்நபரிடமிருந்து 2 மோட்டார்சைக்கிள்கள், 5 தொலைபேசி உபகரணங்கள் என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (உ-63,10)

# உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக தயா செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தயாசெனிவிரத்ன யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ம)

# நிதி உதவிகளை அரசு பயன்படுத்த தவறிவிட்டது

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கல்விச் சீர்திருத்தங்கள் உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களுக்காக உலகவங்கி மற்றும் பல உதவி நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி உதவிகளை ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் சரியான முறையில் பயன்படுத்தவில்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற அனைத்து முகாமைத்துவ ஏற்பாட்டுத்திட்ட சான்றிதழ் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இக்குற்றச்சாட்டினை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி,

பொதுஜன ஐக்கிய முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் எவற்றையும் அரசாங்கம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவில்லை.

1977 ஆம் ஆண்டில் இருந்து போதைப் பொருள் பாவனை, ஆயுதக்கிளர்ச்சி போன்ற சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (தி-61)

# புலிகளுக்கு எதிரான அரசின் பிரசாரம் பிசுபிசுத்துவிட்டது

## புலிகளின் அதிகாரபூர்வ ஏடு தகவல்

(கிளிநொச்சி)

புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசாங்கங்கள் புனைந்து பரப்பிய கருத்துக்கள் சர்வதேச அளவில் படிப்படியாக பிசுபிசுத்துப் போகும் நிலை தோன்றியுள்ளது. என தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான “விடுதலைப் புலிகள் ”தை மாத இதழில் தெரிவிக கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசாங்கங்கள் முன்னர் புனைந்து பரப்பிய அவதூறுக் கருத்துக்கள் சர்வதேச அளவில் படிப்படியாகப் பிசுபிசுத்துப் போகும் நிலை தோன்றியுள்ளது. போர் வெறியர் சமாதான விரோதிகள் பயங்கரவாதிகள் என்றவாறாக விடுதலைப் புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு அள்ளி இறைத்த அரசியல் அவதூறுகளை உண்மை யென மேற்கு நாடுகள் முன்னர் நம்பியிருந்தன. ஆனால் கடந்த இரண்டு வருடகால சமாதான நடவடிக்கைகளில் புலிகள் இயக் கம் காட்டிவரும் சமாதான விருப்பு நெகிழ்ச்சிப் போக்குகள் நேர்மை யான அணுகுமுறைகளும் அரசியல் இராஜதந்திரச் செயற்பா டுகளும் மேற்குநாடுகள் கொண்டி ருந்த தப்பபிப்பிராயங்களைத் தகர்க்க உதவியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் தலைவர் பிரபாகரன் செய்து கொண்ட போர்நிறுத்த உடன் படிக்கையில் ஏற்றுக் கொள்ளப் பட்ட விடயங்களை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத் தாத போதும், புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்களை முறித் துக் கொள்ளவில்லை

மாறாக சிங்கள, அரசாங்கத் திற்குக் கால அவகாசங்களை வழங்கி, விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சமாதான முயற்சியை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்கப் புலிகள் இயக்கம் உதவியது. போர்நிறுத்த காலத்தில் புலிகளின் வணிகக் கப்பல்களை சிங்களக் கடற்படை தாக்கியழித்த நிலையி லும் புலிகள் பொறுமை காத்தனர். தமிழீழக் கடற்பரப்பில் போராளி கள் பலரது சாவுக்குச் சிங்களக் கடற்படை காரணமாக இருந்த போதும் சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்கப் புலிகள் முனைய வில்லை.

அண்மையில் அரசாங்கத்தின் சில அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிகா பறித்தெடுத்த கையோடு நாடு முழுவதும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி ஒரு பதற்ற நிலையை தோற்றுவித்தி ருந்தார். இதற்குப் பதிலடியாக ஏ-9 பாதையை மூடி புலிகள், சமாதானப் பேச்சுக்களை முடித் துக் கொள்ளப் போகின்றார் கள் என்று உலக நாடுகள் நினைத்தி ருந்தன.

ஆனால் புலிகள் இயக்கம் பொறுமை இழக்கவில்லை சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து புலிகள் இயக்கம் சமாதானச்சுடரை அணையவிடாது பாதுகாத்தது. சமாதானத்தைக் குழப்பியடிக்கும் வகையில் சிங்களத் தரப்பு பல தடவைகள் நடந்து கொண்ட போதும் அவற்றுக்குப் பதிலடியாகப் புலி கள் இயக்கம் காட்டிய அரசியல் முதிர்ச்சியும். விவேகமான செயற் பாடுகளும் சர்வதேச சமூகத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

இது காரணமாக உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்கு வந்து புலிகளின் தலைமைப் பீடத்தைச் சந்தித்து கருத்துப் பரி மாறும் அளவுக்குப் புலிகள் மீதான மதிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர் என விடுதலைப் புலிகள் ஏடு மேலும் தெரிவித் துள்ளது. (ந)

## உடுகம்பொலவுக்கு கட்டாய ஓய்வு

(கொழும்பு)

மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக் களஞ்சிய விவகாரத் தினை அம்பலப்படுத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலஸ்ரீ உடுகம்பொலவுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது இவருக கெதிராக ஒழுக்காற்று நடவடிக் கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து குலஸ்ரீயை கட்டாய ஓய்வில் அனுப்புமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வா உத்தரவிட் டுள்ளார். (ச)

# ரெலிக்கொம் தலைவரை பதவிநீக்க அரசுக்கு பூரண அதிகாரம் உண்டு

## சட்டமா அதிபர் ஆலோசனை

(கொழும்பு)

திலங்க சுமதிபாலவை பதவி நீக்கம் செய்யும் சகல உரிமை களும் அரசாங்கத்திற்கிருப்பதாக சட்டமா அதிபர் கமலசபேசன் நிதி யமைச்சிற்கு ஆலோசனை வழங்கி யுள்ளார். சுமதிபாலவை அகற்று வதற்கான அறிவுரைகளை நிதிய மைச்சர் கே.என்.சொக்ஸி சட்டமா அதிபரைக் கோரியிருந்தார். இதற்கு முன்னர் ரெலிகொம் தலைவர் பதவியிலிருந்து சுமதிபாலவை நீக்கும்படி ஜனாதிபதி அரசாங்கத் திற்கு கடந்த ஜனவரி 27 அன்று சிபார்சு செய்திருந்தார்.

தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைகளை சொக்ஸி பிரத மருக்கு எடுத்துக் கூறியுள்ளார். இவ்வார முற்பகுதியில் இடம்பெற வுள்ள கலந்துரையாடலின் பின்னர் சுமதிபாலவை பதவி நீக்குவது தொடர்பான இறுதிமுடிவு எடுக் கப்படும் இவர் தற்போது குடிவரவு, குடியகல்வு சட்டத்தின்கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புத் தொடர்பாக அமைச்சுச் செயலா ளர் திலக் ரணவிராஜாவுக்கு கடி தம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனை ரணவிராஜா திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தைக்கு சமர்ப்பித்தார். ரத்வத்தை ஜனாதி பதியின் பணிப்புரையை நிதிய மைச்சர் சொக்ஸிக்கு அறிவித் திருந்தார். அதனைத் தொடர்ந்து சொக்ஸி சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்.

ரணவிராஜா எழுதிய கடிதத் தில் ரெலிக்கொம் தலைவர் பதவி யிலிருந்து சுமதிபால இதுவரை இராஜினாமா செய்யவில்லை. இந்நிலையில் ஜனாதிபதியின் அறி வுறுத்தல்படி ரெலிக்கொம் தலை வர் பதவியிலிருந்து அவரை நீக் கும் நடவடிக்கைகளை உடனடி யாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். ரெலிக்கொம் ஜப் பானிய என்.ரி.ரி நிறுவனத்துடன் பங்காளியாக இருக்கின்ற படியால் சுமதிபாலவை தம்விருப்பப்படி பதவி நீக்குவதற்கு தமக்கு அதி காரம் உண்டா என அரசாங்கம் குழப்பத்தில் இருந்தது. எவ்வாறா யினும் ரெலிகொம் சபைக்கு 6 பணிப்பாளர்களை நியமிக்கும் அளவிற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஏனைய பணிப் பாளர்களை ஜப்பானியர்களே நிய மிப்பர். தற்போது புதிய தலைவர் ஒருவரை ஏகமனதாக அனை வரும் தெரிவுசெய்ய வேண்டியுள் ளது என்றுள்ளது.

இதேவேளை சுமதிபாலவை பதவி நீக்கம் செய்வதற்குத் சகல தரப் பினராலும் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வரும் வேளையில் இராஜி னாமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்க சுமதிபால மறுப்புத் தெரிவித் துள் ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

## அரசாங்கம்...

களை அரசாங்கம் காட்டி வரு வதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டார்,

ஜப்பானிய பொருளாதார ஒத்து ளைப்புக் குழுவொன்றுக்குத் தலைமைதாங்கி கொழும்புக்கு வந்தவர், கொழும்பில் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டுள்ள துடன், வன்னிக்கும் விஜயம் செய்ய வுள்ளதாக தெரியவருகிறது. (த)

## கூட்டணிக்குள்...

ன்றை நியமிப்பதற்குரிய தேவை எதுவும் இப்போது எழவில்லை. ஏற்கனவே எனது தலைமையில் வேட்பாளர் நியமனக் குழு ஒன்று இயங்கி வருகின்றது அந்தக் குழுவே அடுத்த தேர்தலில் போட்டியிடக் கூடிய வேட்பாளர் களைத் தெரிவு செய்யும். இதனை நேற்றுக் கூடிய மத்திய செயற் குழுவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருக்கிடையில் கருத்து முரண்பாடுகள் இருப்பதாக வெளியில் பேசிக் கொள்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. கட்சியின் உயர் பதவியில் உள்ள ஒரு சிலர் தமது நிலைப்பாட்டை மற்றவர்கள் மத்தியில் வற்புறுத்தி நிலைநாட்ட முற்படுகிறார்களே ஒழிய வேறு ஒன்றும் கிடையாது. கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் அனை வரும் ஒற்றுமையாக செயற்பட்டு வருகிறார்கள் என்று சங்கரி கூறினார். (ம)

## பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

அராலி முருகமூர்த்தி வித்தியா லயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ஜெ.தரும ராசா தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வுக்கு சங்கானை கோட்டம் கல்விப் பணிப்பா[illegible] சி.செல்லையா பிரதம விருந்தின ராகவும், கல்வித்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் பா.தியோஜினஸ் சிறப்பு விருந்தின ராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-49)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மலேசியாவின் தேசிய ஆசிரிய பணியாளர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், சர்வதேச கல்வியகத்தின் தற்போதைய நிபு ணத்துவ ஆலோசகருமான எ.ராஜ குரு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

இவருடன் யாழ் குடாநாட்டு கல்வியில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு நல் லூரில் உள்ள இலங்கைத் தமி[illegible] ஆசிரியர் சங்கத்தலைமையக[illegible] தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து கிளைச்சங்கங்களின தும் தலைவர், செயலாளர் மற்றும் தாய்ச்சங்க மாவட்ட, வலய மட்ட நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலாளர் க.குமார சாமி கேட்டுள்ளார். (ச)

## புறக்கோட்டையில் பெண்ணின் சடலம்

(கொழும்பு)

புறக்கோட்டைப் பழைய சோன கத் தெருவில் உள்ள லொச் ஒன் றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் ஒன்றை பொலிஸார் நேற்று மீட் டுள்ளனர்.

சடலம் மீட்கப்பட்டதை அடுத்து இப்பெண்ணின் மரணம் தொடர் பாக புறக்கோட்டைப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (ம)

## வடக்கு அபிவிருத்தி...

இது பற்றிக் கூறுகையில், புனர மைப்பிற்காக ஆரம்பத்தில் 65ஆயி ரம் ரூபா ஒதுக்கப்பட்டது. பின்னர் அது ஒரு லட்சம் வரை அதிகரிக் கப்பட்டுள்ளது. இதில் 25ஆயிரம் ரூபா முதலிலேயே வழங்கப்பட் டுள்ளது. இந் நட்டஈட்டை வழங்க நிதிவசதிகளும் வளங்களும் நமக் குத் தேவை. இதனைவிட கடந்த வருடம் 12மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வடக் குக் கிழக்கு மாகாண சபையூ[illegible] வழங்கியிருந்தது. இதனைப் ப[illegible] படுத்தி 48ஆயிரம் குடும்பங்களு[illegible] நட்டஈடு வழங்கப்பட்டது.

தற்போது உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட 4 மில்லியன் டொல ரை 8 மாவட்டங்களுக்கும் சம மாகப் பிரித்து வழங்கப்படவுள்ளது. இதில் சாவகச்சேரியில் உள்ள அழிவுற்ற பாடசாலைகள், கட்டடங்கள என்பனவும் புனரமைக்கப்படும். இவ் வாறு அமைச்சர் ஜெயவர்த்தனா கூறினார். (த-6)

# இலங்கையின் சமாதான முயற்சியை உலக நாடுகள் அவதானிக்கின்றன

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித் துக் கொண்டிருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரால்ட் தெரிவித்துள்ளார்.

தேசிய வர்த்தக சம்மேள னத்தின் 45 ஆவது பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பீற்றர் ஹெரால்ட் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் முதலீடுகளை மேற் கொள்ள வேண்டுமானால் சமாதான நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கை அரசியல் கட்சிக ளின் கவனம் நாட்டின் சமாதான நடவடிக்கைகள் குறித்ததாகவே இருக்க வேண்டும் என்று தெரி வித்த அவர் சமாதான நடவடிக் கையின் மற்றுமொரு அங்கமாக போர்நிறுத்த உடன்படிக்கையும் அமைந்துள்ளது என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது எனவும் குறிப் பிட்டார்.

சமாதான முயற்சிகளில் அரசா ங்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறது என்பதைப் பொறுத்தே இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நிதியின் அளவும் தீர்மானிக் கப்படும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ந)

ஆங்கில வகுப்புகள்

*Spoken English, English Literature and English Language. Grade 9,10,11* மேற் குறித்த வகுப்புகள் *Jaffna Technical Institute* இலுப்பை யடிச் சந்தி 367 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் 06.02.2004 ஆரம்பமாகிறது.

ஆசிரியர்: தெய்வதவபாலன்

விபரங்களுக்கு: பதிவாளர் J.T.I.

(C/7342)

பிரத்தியேக வகுப்புக்கள்

A/L - 2005/2006

கணக்கீடு - ப.கணேஸ்

(B.com, Dip.in.pub.Adm)

வணிகக் கல்வி - அ.ஆனந்தன்

(B.B.A.Hons, Dip.in.Edu)

ஆரம்பம் – இன்று (02.02.2004) பி.ப. 4 மணி

தொடர்பு:-

விக்கினேஸ்வரா கல்வி நிலையம்,

பொற்பதி வீதி, கொக்குவில்

(C7196)

அன்பு மாணவர்களே!

உங்கள் வலம்புரியில்

மிக விரைவில் எதிர்பாருங்கள்

சுந்தரின்

5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்.

மு.குறிப்பு: 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள்,

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.